பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | மார்கழி 18 | செவ்வாய்க்கிழமை 02.01.2018 | கதிர் 58

## இ.போ.ச. போராட்டத்தால் மக்கள் நேற்று அந்தரிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜன.02

புதுவருட தினமான நேற்று முதல் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் ஆரம்பித்துள்ள தொடர்ச்சியான பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியிருந்தனர்.

பக்கம் 18

# தமிழரின் ஏகப் பிரதிநிதிகள் தமிழ்க் கூட்டமைப்புத்தான்!

## அடித்துக் கூறுகிறார் மாவை



நற்பிட்டிமுனை, ஜனவரி 02

"ஆயுதப் போராட்டம் முடிந்ததன் பின்னர் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் தங்களது ஏகப் பிரதிநிதிகள் தமிழ்க் கூட்டமைப்புத்தான் என்பதை நிரூபிக்கத் தவறவில்லை."

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா எம்.பி.

நேற்று அம்பாறை மாவட்டம் நற்பிட்டிமுனையில் தேர்தல் தொடர்பான கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் பெருமிதத்துடனும், உரிமையுடனும் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

பக்கம் 18



*DAN தொலைக்காட்சி ஏற்பாட்டில் யாழ்.முற்றவெளியில் நேற்றுமுன்தினம் மாலை முதல் நடைபெற்ற 2018 புத்தாண்டை வரவேற்கும் நிகழ்ச்சியின் மேடைத் தோற்றம் இது.*

## அரச பஸ் சேவை வடக்கில் நேற்று முற்றாக முடங்கியது

### முதல்வருக்கு எதிரான தொழிற்சங்க நடவடிக்கையால்

வவுனியா,ஜன.01

வவுனியா மத்திய பஸ் நிலைய விவகாரத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் எடுத்த தன்னிச்சையான முடிவின்மூலம், வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகத்

பக்கம் 18



## மதவாச்சி விபத்தில் நால்வர் காயம்

யாழ்ப்பாணம் – கண்டி பிரதான வீதியில் மதவாச்சி – நாவற்குளம் பகுதியில் நேற்று பட்டா மற்றும் கப் ரக வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி ஏற்பட்ட விபத்தில் நான்கு பேர் படுகாயம் அடைந்தனர்.

அந்த நான்கு பேரும் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இனி இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர் தெரிவுகளில் இடம்பெற்ற தில்லுமுல்லுகள் பற்றிய செய்திகள் இப்போது கசியத் தொடங்கியுள்ளன.

நல்லூர் பிரதேச சபைக்கான ஒரு வட்டாரத்தில் போட்டியிடும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி உறுப்பினரான இளைஞர் ஒருவருக்கு 'ஆவா' குழுவுடன் நேரடித் தொடர்புகள் இருக்கின்றன என்றும் அவருக்கு எப்படி வாக்களிக்கும் படி கூட்டமைப்பு எங்களைக் கோர முடியும் என்றும் பொருமுகின்றார்கள் அந்த வட்டார மக்கள்.

மேற்படி வேட்பாளரின் சகோதரனுக்கு வாள் வெட்டுச் சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாண நீதிமன்றங்களில் பத்துக்கும்

பக்கம் 18

வடக்கு முதலமைச்சரின் உத்தரவால்

## மூடப்பட்டது வவுனியா பழைய பஸ் நிலையம்



(மேலும் படங்கள் 4ஆம் பக்கத்தில்)

வவுனியா,ஜன.02

வவுனியா பழைய பஸ் நிலையம் வடக்கு மாகாண முதலமைச்சரின் உத்தரவையடுத்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் மூடப்பட்டு அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா நகரசபைச் செயலாளர்

பக்கம் 18

## பொலித்தீன் பாவனைத் தடை முழு அளவில் நடைமுறைக்கு

கொழும்பு,ஜன.02

தடை செய்யப்பட்ட பொலித் தீன் பைகள், லஞ்ச் சீற்றுகள், ரெஜிபோம் சாப்பாட்டுப் பெட்டிகள் போன்றவை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள தடையை மத்திய சூழலியல் அதிகார சபை நேற்று பிறந்த புத்தாண்டுடன் முழு அளவில் நடைமுறைப்படுத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

20 மைக்ரோன் அளவுக்குக்

பக்கம் 18

## மோ.சைக்கிளின் அதிவேகம் இருவரின் உயிரைப் பறித்தது

### வருடப் பிறப்பன்று யாழ்.துண்டியில் சோகம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜன.02

புது வருடப் பிறப்பான நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம், மணியம்தோட்டம், துண்டி சந்திப் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில், அதே பகுதிகளை சேர்ந்த

பக்கம் 18

## சிவராமின் படுகொலையுடன் புளொட்டுக்கு தொடர்பில்லை

### சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஜன.02

மூத்த ஊடகவியலாளர் சிவராம் படுகொலையுடன் புளொட்டுக்கு எந்தத் தொடர்புமில்லை. அதனை நீதிமன்றமே உறுதிப்படுத்திவிட்டது. சில அச்சு ஊடகங்களேஎமதுகட்சியை இலக்குவைத்துத் தவறான செய்தியை வெளியிடுகின்றன.

– இவ்வாறு புளொட் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

பக்கம் 18

## தபால்மூல வாக்களிப்பு அட்டை ஜன. 11ஆம் திகதி விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.02

உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு அட்டைகள் எதிர்வரும் 11ஆம் திகதி கையளிக்கப்படவுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்

பக்கம் 18

## ஒன்றரை வயதுக் குழந்தை வாய்க்காலில் விழுந்து சாவு!

### கிளிநொச்சியில் நேற்றுப் பரிதாபம்

கிளிநொச்சி–இரத்தினபுரம் பகுதியில் வாய்க்காலில் விழுந்து ஒன்றரை வயதான குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

ராஜேந்திரகுமார் யுகினேஸ் என்ற ஆண் குழந்தை, நேற்றுக் காலை வீட்டின் முன்பாக உள்ள வாய்க்காலுக்கு அருகில்

பக்கம் 18

# பணத்தையோ, பொருள் மானியத்தையோ வழங்கும் வேட்பாளர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை!

கொழும்பு, ஜன. 02

உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரையின் ஓர் அங்கமாக, தனிப்பட்ட அல்லது பொது நிதியிலிருந்து பணத்தையோ அல்லது பொருள் மானியத்தையோ வழங்கும் வேட்பாளர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் சட்டங்களின் படி தேர்தல் பரப்புரைகளின் போது வேட்பாளர்கள் மானியங்களை வழங்குகின்றமை சட்டவிரோதமாகும். அது ஓர் இலஞ்ச வழக்காகக் கருதப்படும்.

தேர்தல் திணைக்களத்தின் உத்தரவுகளை அரசாங்க அதிகாரியோ அல்லது அரசாங்க நிறுவனமோ தேர்தல் சட்டங்களை மீறினால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

மத அமைப்புகளுக்கு நிதி வழங்குவது, கல்விக்கான பொருள்களை வழங்குவது போன்ற நடவடிக்கைகளில், அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் ஈடுபடுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பரப்புரையின் ஒரு பகுதியாக இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



மஹிந்த தேசப்பிரிய எச்சரிக்கை

அரசாங்க நிதியிலான உதவிகளை பொதுமக்களுக்கு வழங்குவதை எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதிவரை இடைநிறுத்தி வைக்குமாறு பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

களஞ்சியப்படுத்தி வைப்பதற்குச் சிக்கலான, கால் நடைகள், தாவரங்கள், விதைகள் மற்றும் இதுபோன்ற பொருள்களை மாத்திரம் விநியோகிக்குமாறு பிரதேச செயலகங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

ஏனைய களஞ்சியப்படுத்தக்கூடிய பொருள்களின் விநியோகங்களை பெப்ரவரி 15 வரை நிறுத்தி வைக்குமாறும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

அத்துடன், குறிப்பிட்ட அரசியல் கட்சிகளால் வாக்குகளுக்காக வழங்கப்படும் அரச நிதியிலான உதவிகளை பொது மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டாம். இந்த உதவிகளை அரசாங்கத்திடம் இருந்து பெறும் உரிமை இருக்கிறது என்பதை பொதுமக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவை அரசாங்க நிதியில் இருந்தே வழங்கப்படுகின்றன என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பிணை முறி அறிக்கையுடன் பொலன்னறுவை சென்றார் ஜனாதிபதி மைத்திரி !

கொழும்பு, ஜன. 02

சர்ச்சைக்குரிய பிணை முறி விநியோகம் தொடர்பான விசாரணைஅறிக்கையை எடுத்துக்கொண்டு பொலன்னறுவையில் உள்ள தமது இல்லத்துக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் சென்றுள்ளார்.

சிங்கள ஊடகமொன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் முழு நாளையுமே, இந்த அறிக்கையை முழுமையாக ஆராய்வதற்காகவே ஜனாதிபதி இதை ஒதுக்கியிருந்தார் என்றும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

## மத்திய வங்கியின் முறி மோசடி: ஜனாதிபதியின் விசேட அறிவிப்பு

கொழும்பு, ஜன. 02

மத்திய வங்கியின் முறி மோசடி தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் விசேட அறிவிப்பொன்று வெளியிடப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாளை இந்த விசேட அறிவிப்பு வெளியிடப்படவுள்ளது.

மத்திய வங்கியின் முறி மோசடி தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த 30 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வனப் பாதுகாப்புத் திணைக்களம் மறுசீரமைக்கப்படும் — மைத்திரி

கொழும்பு, ஜன. 02

வனப் பாதுகாப்புத் திணைக்களத்துக்குத் தேவையான வளங்களை எந்தவித குறைபாடும் இன்றி பெற்றுக் கொடுத்து அதனை முழுமையான மறுசீரமைப்புக்கு உட்படுத்த அரசு தற்பொழுது நடவடிக்கை எடுத்து வருகிறது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதனால், மக்கள் எதிர் நோக்கியுள்ள காட்டு யானைப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலன்னறுவையில்வெஹெரகல பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் இதனைக் கூறியுள்ளார்.

வனப் பாதுகாப்புத் திணைக்களத்திடம் வளப் பற்றாக்குறை காரணமாக யானை வேலி அமைப்பதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. எதிர்வரும் நாள்களில் இந்தப் பிரச்சினை



தீரும் எனவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வனப் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு நாட்டிலுள்ள பௌத்த இனவாத அமைப்புக்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றன. வில்பத்து வனப் பிரதேசத்தை அழித்து மக்களைக் குடியேற்றுவதாகவும் பெறுமதி வாய்ந்த மரங்களை வெட்டுவதாகவும் அவ்வமைப்புக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வனப்பாதுகாப்புத்திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் முன்னெடுத்து வரும் தீர்மானங்கள் பாராட்டத்தக்கவை எனவில்பத்து குடியேற்றம் தொடர்பில் மும்முரமாக செயற்பட்டுவரும் தேசிய சங்க சம்மேளனத்தின் செயலாளர் வண. ஆனந்த சாகர தேரர் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் வாழ்த்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஜன.02

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகை சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நாளை புதன்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் இடம்பெறும்.

மாதாந்தம் வரும் மூல நட்சத்திரத்தில் திருவாசக முற்றோதல் வழமையாக இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

(இ)

## வற்றாப்பளை – புதுக்குடியிருப்பு வீதி நேற்றிலிருந்து மக்கள் பாவனைக்கு!

முல்லைத்தீவு, ஜன. 02

கேப்பாபிலவு இராணுவ முகாம் அமைத்து தடை செய்யப்பட்ட வற்றாப்பளை - புதுக்குடியிருப்பு வீதி நேற்றுக் காலை 5 மணிமுதல் மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

மிக நீண்ட காலமாக மக்கள் கோரிக்கையாக இருந்த வற்றாப்பளை புதுக்குடியிருப்பு வீதி யுத்தம் முடிந்து மக்கள் மீள் குடியேறியபோது கேப்பாபிலவு கிராமம் இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்டிருந்தது.

அத்தோடு, இந்த வீதியும் சுமார் 1.5 கிலோமீற்றர் வரை



மறிக்கப்பட்டு இதற்கு மாற்றீடாக சுமார் 4 கிலோமீற்றர் காட்டு வழியாக புதிதாக பாதை அமைக்கப்பட்டது.

இதனால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வந்தமையோடு இந்த பாதையை திறந்து விடுமாறு கோரிய நிலையில் கேப்பாபிலவு மக்கள் தமது நிலம் வேண்டி போராடி 307 ஆவது நாளான நேற்று அவர்களது காணிகளுக்குச் செல்ல இராணுவம் அனுமதித்ததோடு வீதியும் மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.

இருப்பினும் கேப்பாபிலவில் மீதமுள்ள 100 குடும்பங்களுக்கான 181 ஏக்கர்காணியை விடுவிக்குமாறு மக்கள் தொடர்ந்து போராடிவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

காலைக்கதிர் Kalaikkathir



# தமக்குள் முட்டி மோதும் கூட்டமைப்பினால் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது!

## கச்சேரியில் டக்ளஸ் தேவானந்தா காட்டம்



உள்ளூராட்சி மன்றங்களின் அதிகார எல்லையை மட்டுப்படுத்தி மக்களுக்கான சேவைகளைமுழுமைப்படுத்தாத நிலையை மாற்றி, அந்த மன்றங்களின் அதிகார எல்லையை விரிவுபடுத்தி அதனூடாக ஓர் உன்னத சேவைகளை வழங்கவே நாம் விரும்புகின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாதெரிவித்துள்ளார்.

மானிப்பாய் சங்குவேலிப் பகுதி மக்களுடனானசந்திப்பில்கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் அவர் தெரிவிக்கையில்–

வடக்கு மாகாண சபையைதமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தமது ஆளுகைக்குள் வைத்திருக்கின்றபோதிலும், இதுவரையில் அதனூடாக எவ்விதமான சேவைகளை மக்களுக்கு வழங்கியுள்ளார்கள் என்ற கேள்வி இன்று எல்லோர் மத்தியிலும் கேட்கப்படுகின்றது.


வடக்குமாகாணசபையின் ஆட்சிக் காலம் செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவு பெறவுள்ள நிலையில், அந்தசபையூடான மக்கள் நலன் சார்ந்தசெயற்றிட்டங்கள் யாவும் செயலற்றுக் கிடக்கின்றமை வேதனையளிப்பதாகவே உள்ளது.

அங்கு ஆளுங்கட்சியினர் தங்களுக்குள்ளேயே முட்டி மோதுகின்றனர். இந்த நிலையில் அவர்களால் மக்களின் பிரச்சினைகளுக்கு எப்படித் தீர்வு காண முடியும் .

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற வடக்கு மாகாணசபைத் தேர்தலில் மக்கள் எமக்கு வாக்களித்திருப்பார்களேயானால் கடந்த ஐந்து வருடகாலப்பகுதியில்வடமாகாணத்தை நிச்சயம் நாம் அபிவிருத்தியை மட்டுமன்றி மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரத்தையும் மேம்படுத்திக் காட்டியிருப்போம்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றதேர்தலில் மக்கள் எமக்கு முழுமையான ஆதரவைத் தந்து எம்மை வெற்றிபெறவைப்பார்களேயானால் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகார எல்லையையும் மீறி மக்கள் நலன் சார்ந்த பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுக்க நாம் தயாராக இருக்கின்றோம் – என்று டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

இந்தசந்திப்பின்போது கட்சியின் யாழ். மாவட்ட உதவிநிர்வாகசெயலாளர் சிவகுருபாலகிருஷ்ணன், கட்சியின் வலி. தெற்கு பிரதேச நிர்வாக செய லாளர் வலன்ரயன் மற்றும் கட்சியின் வேட்பாளர்கள் எனப் பலர் உடனிருந்தனர். (உ)




# காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினையை பிரசாரத்துக்குப் பயன்படுத்தாதீர்கள்!

## தீர்வைப் பெற்றுத் தராத அரசியல்வாதிகளிடம் உறவுகள் வலியுறுத்து

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையை தேர்தல் பிரச்சாரங்களில் பயன்படுத்த வேண்டாம் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, வலிந்து காணா மல் ஆக்கப்பட்டவர்களின்உறவினர்கள்சங்கத்தினர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர் களின் உறவினர்களுக்குஎந்தவிதத்தீர்வையும் பெற்றுத் தராத வர்கள் நடைபெறவுள்ள உள்ளூராட்சிதேர்தலில்இந்தவிடயத்தை பிரச்சாரத்திற்குப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

யுத்தம் முடிவுக்கு வந்து எட்டு வருடங்கள் கடந்த நிலையிலும் தங்களின் காணாமல் ஆக்கப் பட்ட உறவினர்களுக்கு எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை.

மக்கள் பிரதிநிதிகளால் தாங்கள் ஏமாற்றப்பட்ட நிலையில் தங் களின் பிரச்சினைகளுக்காக வீதியில் இறங்கிப் போராட்டத்தை ஆரம்பித்து நேற்றுடன் 316 நாட்கள் ஆகின்றன.

இரவு பகலாக பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வீதியில் போராடி வருகின்றனர் எனவும் தாங்கள் அனைத்து தரப்பினராலும் கைவிடப்பட்டுள் ளனர் எனவும் அவர்கள் குறிப் பிட்டுள்ளனர்.

இந்த நிலையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளுக்கு தீர் வைப் பெற்றுத்தர முடியாதவர் கள் இந்தப் பிரச்சினையை தேர்தல் காலங்களில் தங்கள் பிரசாரத்திற்காக பயன்படுத்தக் கூடாது எனக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# புதுவருடப் பூஜையில் டக்ளஸ்





யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற புதுவருடச் சிறப்புப் பூஜை வழிபாடுகளில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டார்.

குருநகரில் அமைந்துள்ள மரியன்னை பேராலயத்தில் காலை 5.30 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை தலைமையில் புதுவருட சிறப்பு திருப்பலி வழிபாடு நடைபெற்றது.

வழிபாடுகளில் கலந்தகொண்டிருந்த டக்ளஸ் தேவானந்தாவுக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் ஆசீர்வாதம் வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்.



# மதத் தலைவர்களிடம் ஆசி பெற்ற தமிழ்த் தேசியப் பேரவையினர்





உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் சின்மயாமின்பிரம்மச்சாரியயாக்கிரத சைதண்யா சுவாமிகள் மற்றும் யாழ்.நல்லைஆதீனகுருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பிரம்மச்சாரிய சுவாமிகள் ஆகியோரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுள்ளனர்.

தமிழ்த்தேசிய பேரவையினர் சார்பில் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் வேட்பாளர்களே நேற்று ஆசி பெற்றுள்ளனர்.

யாழ். சின்மயாமின் சுவாமிகள் ஆச்சிரமத்தில் நடைபெற்ற சந்திப்பில் தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ். மாநகர முதல்வர் வேட்பாளர் வி.மணி வண்ணன் தலைமையிலான குழுவினர் சுவாமிகளைச் சந்தித்தனர்.

இதன்போது, அவர்களுடன் .இதனையடுத்து நல்லை ஆதீன குருமுதல்வரைச் சந்தித்து ஆதீனக் குரு முதல்வரிடமும் ஆசீர்வாதம் அவர்கள் பெற்றனர்.

இதனையடுத்து, நல்லூர் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்ட தமிழ்த் தேசியப் பேரவையினர் நல்லூர் தேரடியில் தவத்திருயோகர் சுவாமிகளின் தியானத்தில் ஈடுபட்ட இடத்திலும் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

இதேவேளை, நேற்று தினம் தமிழ்த் தேசியப் பேரவையினர் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் ஆடிகளார் ஆகியோரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

# சந்தேகத்துக்கு இடமான வகையில் தொற்று மரணங்கள் இங்கு இல்லை

## யாழ்.,முல்லை நிலைமை குறித்து ஆய்வறிக்கை

அண்மையில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெற்றவை எனக் கூறப்பட்ட – சந்தேகத் துக்கிடமான – மரணங்கள் இயற்கையானவையே என்று தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் யாழ்ப்பா ணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெற்ற பல மரணங்கள் குறித்து சந்தேகங்கள் எழுந்தன.

இது குறித்து ஆய்வு நடத்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து, மாவட்ட சுகாதார அதிகாரிகளுடன் இணைந்து நடத்தப்பட்ட ஆய்வுகளில் இந்த மரணங்கள் நோய்த் தொற்று களால் இடம்பெற்றவை அல்ல என்றும், இயற்கையான காரணங்களால் நிகழ்ந்தவை என்றும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அடையாளம் காண முடியாத நோய்த் தொற்று ஏற்பட்டு மரணங்கள் நிகழ்ந்துள்ளன எனக் கூறப்படுவது அடிப் படையற்றது; விஞ்ஞான ரீதியாக அது நிரூபிக்கப்படவில்லை என்றும் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

(உ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பிணைமுறி விசாரணை விவகாரம்

மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் குறித்து விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழு தனது பரிந்துரை அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்து விட்டமையை அடுத்து பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அந்த அறிக்கையை வெளியிட்டு, குற்றவாளிகளைத் தண்டிக்கும் நடவடிக்கையை ஜனாதிபதி விரைந்து முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கை அவரது கட்சிக்குள் இருந்தும், வெளியில் இருந்தும் பரவலாக வெளியிடப்பட்டு வருகின்றது.

அந்த இறுதி அறிக்கையில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்பது பகிரங்கமாவதற்கு முன்னரே, அதில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, பெயர் குறிப்பிடப்பட்டிருப்பார்கள், அவர்கள் மீது தண்டனைக்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கும் என்றெல்லாம் ஊகங்களின் அடிப்படையில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அந்தக் கோரிக்கைகள் சரியாகவும் இருக்கலாம்; பிழையாகவும் இருக்கலாம்.

இந்த விடயத்தில் தவறிழைத்து விட்டவர்கள் எல்லோரும் ஐ.தே.கட்சியினர் என்றும், அவர்களை சு.கவின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தண்டிக்க வேண்டும் என்ற பாணியிலும் கூட வேண்டுகோள்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

ஆனால், இந்த மத்திய வங்கி பிணைமுறி விசாரணை விடயத்தில் ஒரு விவகாரம் இன்னும் பல தரப்பினராலும் கவனிக்கப்படாமல் இருக்கின்றமையை நாம் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கின்றது.

அது, இந்த முழு விசாரணை முறைமையுமே சட்ட ரீதியாக தவறானது என்ற அம்சமாகும்.

மேற்படி ஆணைக்குழுவின் விசாரணைகளின் இறுதிக் கட்டத்திலேயே அது கூட ஆணைக்குழுவுக்கும் சுட்டிக்காட்டப்பட்டது. அது குறித்து கருத்துகள், சட்டவாதங்கள் ஆணைக்குழு முன் வைக்கப்பட்ட போது ஆணைக்குழுவே அசந்து போய் நின்றது என்பதைச் சுட்டிக்காட்டுவதும் நமது கடமையாகின்றது.

மேற்படி விசாரணை ஆணைக்குழு எவ்வித அரசியல் தலையீடுகளும் இல்லாது, எவரது அதிகாரத்துக்கும் கட்டுப்படாது, ஊழல், அச்சுறுத்தலுக்கு அடி பணியாது செயற்பட்டது என்று கூறப்பட்டாலும், அது நடத்திய விசாரணை முறைமை சட்ட ரீதியில் மிகவும் தப்பானது என்பதை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., ஆணைக்குழுவின் முன் தோன்றி சட்ட ஆவணங்கள், ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டியிருந்தார்.

குற்ற விடயங்களைப் புலனாய்வு செய்வது பொலிஸார், விசேட பொலிஸ் பிரிவினர் போன்றவர்களின் பொறுப்பு. அரசு சார்பில் சட்ட விசாரணைக்கு உதவுவதும் அதை முன்னெடுப்பதும் சட்டமா அதிபர் திணைக்களமாகும்.

ஆனால், பிணைமுறி விசாரணை விடயத்தில் அரசின் சட்டத்துறைப் பிரிவான சட்டமா அதிபர் திணைக்களமே குற்றப் புலனாய்வுப் பிரிவாகவும் செயற்பட்டிருக்கின்றது; சட்டமா அதிபரின் அலுவலகமே குற்ற விசாரணை செயலகமாகவும் இயங்கியிருக்கின்றது.

இது சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் நலன் முரண்பாட்டுப் போக்கை (Conflict of Interest) ஏற்படுத்தும் விடயமாகும்.

அத்தகைய முரண்பாட்டு நலனுடன் முன்னெடுக்கப்பட்ட விசாரணை தவறானது என்பதை ஆணைக்குழு விசாரணையின் கடைசி நாளில் சுமந்திரன் சுட்டிக் காட்டினார். அந்தத் தவறை ஏன் நேரத்துடன் தமக்குச் சுட்டிக்காட்டவில்லை என்று ஆணைக்குழு சுமந்திரனிடம் கோரியது.

தன்னுடைய கட்சிக்காரரான மத்திய வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் பதுமநாதன் தொடர்பில் வங்கியும், ஆணைக்குழுவும் கடைசி நேரத்தில் தவறான முடிவுகளையும் நடவடிக்கைகளையும் எடுத்தமையால் தாம் கடைசி நேரத்தில் ஆணைக்குழு முன் தோன்றி அந்த வாதத்தை வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டதாக சுமந்திரன் பதிலளித்தார்.

சுமந்திரனின் வாதத்தை ஏற்ற ஆணைக்குழு அவரது கட்சிக்காரர் தொடர்பில் தாம் எந்தப் பரிந்துரையையும் செய்யப் போவதில்லை என்று கூறி சமாளித்துள்ளது!

ஆனால், இந்த விசாரணை முறைமை தவறானது என்று குறிப்பிட்டு முகாமையாளர் பதுமநாதன் சார்பில் சுமந்திரனால் தாக்கல் செய்யப்பட்டு, விவாதிக்கப்படும் அடிப்படை உரிமைமீறல் மனு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

விசாரணை ஆணைக்குழுவின் மூன்று ஆணையாளர்களில் இருவர் உயர்நீதிமன்ற நீதியரசர்கள். அந்த நீதியரசர்கள் உட்பட முழு ஆணைக்குழு மற்றும் விசாரணை நடத்திய சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றுக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ளது உயர்நீதிமன்றம்.

தன்னுடைய சக நீதியரசர்களுக்கு எதிரான மனுவை விசாரணைக்கு உயர்நீதின்றம் ஏற்றுக் கொண்ட நிலையில், இந்த ஆணைக்குழு விசாரணை முறைமையே தவறானது என்பதுதான் அந்த மனுவின் பிரதான சட்டவாதமாகவும் பொருளாகவும் அமைந்துள்ளது.

இந்தப் பின்புலத்தில், அந்த மனு மீதான தீர்ப்பு விரைவில் வெளிவரும் போது, சில சமயங்களில் இந்த ஆணைக்குழு விசாரணை முறைமையை சட்ட ரீதியாகச் செல்லுபடியற்றதாகி விடுவதற்கு வாய்ப்புகள் உண்டு.

அத்தகைய ஒரு முறைமையில் அமைந்த இந்த ஆணைக்குழு விசாரணை அறிக்கை தற்போதைய சமயத்தில் அரசியல் கிலுகிலுப்புகள், பிரசாரங்களுக்கு உதவக்கூடும். ஆனால், சட்ட ரீதியில் அது வலுவானதா என்பது இனித்தான் கண்டறியப்பட வேண்டியிருக்கும்.

# உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பற்றிய தகவல்கள் வேண்டும்




கொழும்பு, ஜன. 02

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பற்றிய தகவல்களை இராணுவம் வைத்திருக்க வேண்டும் என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

வேட்பாளர்கள் மற்றும் சமூகத்தின் ஏனைய உறுப்பினர்களின் விவரங்களைத் திரட்டுகின்றமையால், அவர்கள் கண்காணிக்கப்படுகின்றனர் என்று அர்த்தமில்லை.

வேட்பாளர் அல்லது ஏனையவர்களுக்கு இராணுவப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய சூழல் ஒன்று ஏற்பட்டால், அவர்களைப் பற்றிய பின்னணித் தரவுகள் இராணுவத்துக்குத் தேவை.

அத்தகைய ஒரு சூழல் ஏற்பட்ட பின்னர் தகவல்களைச் சேகரிப்பதற்காக காத்திருக்க வேண்டியதில்லை.

சட்டம் மற்றும் ஒழுங்கு விவகாரத்தை கையாள்வது காவல் துறையின் கடமை என்றாலும், தகவல் சேகரிப்பு தேவையாக உள்ளது. முன்னாள் படையினர், இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்கள் தேர்தலில் போட்டியிட முனைந்தால், அவர்கள் பற்றிய தகவல்கள் இராணுவத்துக்குத் தேவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மற்றொரு கேள்விக்குப் பதிலளித்துள்ள இராணுவத்தளபதி, போரின்போது இராணுவம் போர்க் குற்றங்களை இழைத்தது என்று கூறப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளார்.

இலங்கை இராணுவம் சித்திரவதைகளில் தொடர்புபடவில்லை என்றும் ஜோசப் முகாம் இப்போது இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெறிச்சோடிய நிலையில் காணப்பட்ட வடக்கு இ.போ.ச. பஸ் நிலையங்கள்!





யாழ்ப்பாணம், ஜன. 02

வடக்கு மாகாண முதலமைச்சர் எடுத்த தன்னிச்சையான முடிவு வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அநீதிழைத்து விட்டதாகத் தெரிவித்து அந்தச் சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளது.

இதனால், யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பஸ் நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

# வவுனியா பழைய பஸ் நிலையம் மூடப்பட்டமையால் கறுப்புக் கொடி கட்டி வர்த்தக நிலையங்களுக்குப் பூட்டு!





வவுனியா, ஜன. 02

கடந்த 53 வருடங்களாக செயற்பட்டு வரும் பழைய பஸ் நிலையத்தை மூடியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று அந்த நிலைய கட்டடத் தொகுதியில் உள்ள வர்த்தகர்கள் கறுப்புக் கொடியைக் கட்டி தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

வட மாகாண முதலமைச்சரின் உத்தரவின் பேரில் நள்ளிரவு 12.00 மணியளவில் பழைய பஸ் நிலையம் வவுனியா நகரசபை செயலாளர். இ.தயாபரனால் பஸ் நிலையத்தின் இரண்டு பக்க நுழைவாயில்களும் பரல்கள் கொண்டு பஸ்கள் உட்செல்வதற்கு தடை செய்யப்பட்டு பாதுகாப்பிற்காக பொலிஸாரும் குவிக்கப்பட்டனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பஸ் நிலையத்தை சூழவுள்ள வர்த்தகர்கள் வர்த்தக நிலையங்களை மூடி கறுப்புக் கொடிகளை வர்த்தக நிலையங்களிற்கு முன்பாக தொங்க விட்டு தங்களது எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக வர்த்தகர்கள் கருத்துத் தெரிவிக்கையில்–

புதிய பஸ் நிலையத்திற்கு நாங்கள் எதிர்ப்பு இல்லை. ஆனால், உள்ளூர் சேவைகளை பழைய பஸ் நிலை யத்திலிருந்தும் வெளியூர் சேவைகளை புதிய பஸ் நிலையத்திலிருந்து நடைமுறைப் படுத்தும் சமயத்தில் எமது வர்த்தகம் பாதிப்படையாது.

அனைத்து பஸ்களும்புதிய பஸ் நிலையத்திலிருந்து செல்லும் சமயத்தில் எமது வியாபாரம் முற்றாக பாதிப்படையும். நாங்கள் நிதி நிறுவனங்களில் பணத்தைக் கடனாகப் பெற்று வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளோம்.

எனவே, எமக்கு உரிய தீர்வுகிடைக்கும் வரை வர்த்தக நிலையங்களை திறக்கமாட்டோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

(க–100)

## நாளை

03.01.2018
புதன்கிழமை

நட்சத்திரம் : புநர்பூசம் மு.ப. 11.59 வரை
திதி : பிரதமை மு.ப.7.01 வரை
சுபநேரம் : 5.00 – 06.30 வரை
இராகுகாலம்: 12.30 – 02.00 வரை

# கூட்டு அரசு நிலைக்குமா?



கொழும்பு, ஜன. 02

கூட்டு அரசை அமைப்பதற்காக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்பாடு நேற்று முன்தினம் நள்ளிரவுடன் காலாவதியாகியுள்ளது.

2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர், இரண்டு கட்சிகளும் இணைந்து இரண்டு ஆண்டுகளுக்கு கூட்டு அரசை அமைப்பதற்கான, புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றில் கையெழுத்திட்டிருந்தன.

இந்தப் புரிந்துணர்வு உடன்பாடு கடந்த செப்ரெம்பர் மாதத்துடன் காலாவதியாகியிருந்தது. இந்த நிலையில், இந்த உடன்பாட்டை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்க முடிவு செய்யப்பட்டது.

நீடிப்புச் செய்யப்பட்ட இந்தப் புரிந்துணர்வு உடன்பாடு நேற்று முன்தினம் நள்ளிரவுடன் காலாவதியாகியுள்ளது.

எனினும், இந்தப் புரிந்துணர்வு உடன்பாட்டை நீடிப்பதா - இல்லையா என்று இரண்டு கட்சிகளும் இன்னமும் முடிவு செய்யவில்லை.

இதுபற்றிக் கருத்து வெளியிட்ட ஐ.தே.கவின் பிரதி பொதுச்செயலரும், அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம்-

கூட்டு அரசில் இருந்து வெளியேறுவதா- நீடிப்பதா என்று கட்சிக்குள் இன்னமும் கலந்துரையாடப்படவில்லை.

உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த பின்னர் இரண்டு கட்சிகளின் தலைவர்களும் இதுபற்றி இறுதி முடிவை எடுப்பார்கள் என்று அவர் தெரிவித்தார்.

# 2017 இல் கடமையின்போது 81 ஊடகவியலாளர் கொலை!

கொழும்பு, ஜன. 02

கடந்த 2017 ஆம் ஆண்டில் கடமையின் போது தாக்குதல்களுக்கு இலக்காகி குறைந்தது 81 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என பெல்ஜியத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மேளனம் (ஐ.எவ்.ஜே.) நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கு முந்திய ஆண்டான 2016 ஆம் ஆண்டு கடமையின் போது 93 ஊடகவியலாளர்கள் பலியாகியுள்ளனர்.

இந்த நிலையில், அந்தத் தொகையுடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்திலான உயிரிழப்புகள் சிறிது குறைவாக உள்ள போதும் இந்தத் தொகையும் கவலை தரக்கூடிய ஒன்றாகவே தொடர்ந்து உள்ளது என அந்தச் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், 2017 ஆம் ஆண்டில் பெருமளவான ஊடகவியலாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களில் 250 பேருக்கும் அதிகமானோர் சிறையிலேயே தொடர்ந்தும் உள்ளனர் என சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மேலும், ஊடகங்கள் சுய தணிக்கைக்கு உட்படுத் தப்படுவது பரந்தளவில் இடம்பெறுவதுடன் ஊடகவியலாளர்கள் சுதந்திர ஊடகவியலுக்கு எதிரான முறையில் தாக்குதல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உட்பட்டு வருகின்றமை மோசமான அளவில் அதிகரித்து வருகிறது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகில் ஊடகவியலாளர்கள் இலக்கு வைக்கப்பட்ட படு கொலைகள், கார்க் குண்டுத் தாக்கு தல்கள் மற்றும் துப்பாக்கிச் சமர் என்பவற்றில் சிக்கி தமது உயிரை இழந்து வருகின்றனர் என அந்த சம்மேளனம் கூறுகிறது.

அதிகளவான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்ட நாடாக மெக்ஸிக்கோ உள்ளது, இதற்கு அடுத்தடுத்த இடங்களில் ஆப்கானிஸ்தான், ஈராக் மற்றும் சிரியா ஆகிய நாடுகள் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ள சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மேளனம், பிராந்திய ரீதியில் ஆசிய பசுபிக் பிராந்தியத்திலேயே அதிகளவு ஊடகவியலாளர்களின் மரணங்கள் இடம்பெற்றுள்ளன எனவும் அங்கு 2017ஆம் ஆண்டில் 26 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள் ளனர் என தெரிவித்துள்ளது.

# தெஹிவளை பொலித்தீன் தொழிற்சாலையில் தீ!

கொழும்பு, ஜன. 02

தெஹிவளை, அத்திடிய பகுதியில் அமைந்துள்ள பொலித்தீன் உற்பத்தி தொழிற்சாலை ஒன்றில் நேற்று அதிகாலை தீ பரவியுள்ளது.

இதன்போது இரண்டு தீயணைப்பு வாகனங்களை பயன்படுத்தி தீ அணைக்கப்பட்டுள்ளது என கொழும்பு தீயணைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த தீ பரவலால் பொலித்தீன் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பல இரசாயனப் பொருள்கள் அழிவடைந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீப்பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(க)

# புதுவருடத்தை வரவேற்ற நள்ளிரவு ஆராதனைகள்





கொழும்பு, ஜன. 02

2018 ஆம் ஆண்டு புதுவருடத்தை வரவேற்கும் நள்ளிரவு ஆராதனைகள் நாடெங்கிலும் வெகு சிறப்பாக இடம்பெற்றன.

இதனடிப்படையில் வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்தில் புதுவருட வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

11.45 மணிக்கு ஆரம்பமான வழிபாடுகளில் நூற்றுக்கணக் கான கிறிஸ்தவ மக்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இளைஞர்கள் நகரெங்கும் வெடி கொளுத்தி புதுவருடக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தமையையும் காண முடிந்தது.

இதேவேளை, புதுவருட பிறப்பை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் தேவாலயங்களில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

2018 ஆம் ஆண்டு புதுவருட பிறப்பை முன்னிட்டு நள்ளிரவு வழிபாடுகள் முல்லைத்தீவு நகர்ப் பகு தியில் அமைந்துள்ள புனித இராஜப்பர் தேவாலயத்தில் அருட்தந்தை அன்ரன் ஜோஜ் தலைமையில் மேற் கொள்ளப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கரோல் கீதங்களும் இசைக்கப்பட்டுள்ளன.

இந்த வழிபாட்டில் முல்லைத்தீவு நகரைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

அத்துடன், முல்லைத்தீவு செல்வபுரம்பகுதியில்அமைந்துள்ள யூதா ததேயு தேவாலயத்தில் அருட்தந்தை ஞானேந்திரன் தலைமையில் சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு திருப்பலிஒப்புக்கொடுக்கப்பட்டு கரோல் கீதங்களும் இசைக்கப்பட்டன.

இந்த வழிபாட்டில் செல்வபுரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். (க)

# யாழில் கிராமசேவகர் அலுவலக பெயர்ப்பலகை சேதப்படுத்தப்பட்டது!

யாழ்ப்பாணம், ஜன. 02

யாழ்ப்பாணம், மணியந் தோட்டம் பகுதியில் உள்ள கிராம சேவகருடைய அலுவலக பெயர்ப் பலகையைச் சேதப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் ஆறு இளைஞர்கள், நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மணியந் தோட்டம் பகுதியில் உள்ள, கிராம சேவகரின் அலுவலகத்தின் முன்றிலில் பொருத்தப்பட்டிருந்த பெயர் பலகையை, சில விசமிகள் நேற்று முன்தினம் இரவு சேதப் படுத்தி விட்டுச் சென்றுள்ளனர்.

அந்த நேரம் வீதியில் பாதுகாப்பு கடமைக்காக ரோந்து சென்ற பொலிஸாரிடம், மேற்குறித்த சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஆறு இளைஞர்களை கைது செய்த பொலிஸார் அவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(க)

காலைக்கதிர் Kalaikkathir



# கருணாவின் குண்டுதுளைக்காத வாகனத்தை ஆழ்கடலில் மூழ்கடித்து அழிக்கத் தீர்மானம்!

இலங்கையில் இதுவரை காலமும் கொள்வனவு செய்யப்பட்ட குண்டுதுளைக்காத வாகனங்களை ஆழ்கடலில் மூழ்கடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட இவ்வாகனங்களை முன்னாள் ஜனாதிபதிகளாக ஜே.ஆர்.ஜயவர்தன, சந்திரிக்கா பண்டாரநாயக்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் பயன்படுத்தியிருந்தனர்.

ஜக்குவார் மற்றும் பென்ஸ் ஆகிய உயர்ரக இவ்வாகனங்களை ஏலத்தில் விட்டால், பெரும் குற்றச்சம்பவங்களுடன்



தொடர்புடையவர்கள் கொள்வனவு செய்து தவறாகப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புள்ளது எனக் கருதியே இவற்றை ஆழ்கடலில் மூழ்கடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, மஹிந்த ஆட்சிக்காலத்தில் பிரதிஅமைச்சராகப் பதவி வகித்த கருணாவிற்கு டொயோட்டாலேண்ட் ரக குண்டுதுளைக்காத வாகன மொன்று வழங்கப்பட்டிருந்தது. அதனையும் மேற்குறித்த வாகனங்களுடன் சேர்த்து மூழ்கடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. வாகனங்களில் காணப்படும் முக்கிய கருவிகள் அகற்றப்பட்டதன் பின்னர், கடற்படையினரால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

## உள்ளூராட்சித் தேர்தல் கட்டுப்பணமாக 69 இலட்சத்து 52 ஆயிரத்து 500 ரூபா

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணமாக 69 இலட்சத்து 52ஆயிரத்து500ரூபாய், மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் அலுவலகத்துக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்தக்கட்டுப்பணத்தை, மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டக்களப்பு மாநகர சபை ஏறாவூர் மற்றும் காத்தான்குடி நகர சபைகள் உள்ளடங்கலாக 9 பிரதேச சபைகளுக்கும் தேர்தலில் போட்டியிடுவதற்காக அரசியல் கட்சிகளும் சுயேச்சைக்குழுக்களும் செலுத்தியுள்ளன.

17 அரசியல் கட்சிகளும் 28 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியிருந்த போதிலும் 21 சுயேச்சைக்குழுக்களே வேட்புமனுப்பத்திரங்களை தாக்கல் செய்திருந்தன.

இந்தக் கட்டுப்பணத்தை தேர்தல் முடிந்தவுடன் வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் 5 வீதத்துக்கு மேல் வாக்குகளைப் பெற்றிருந்தால் வட்டார வேட்பாளரின் கட்டுப்பணத்தையும் முழு சபைக்காக 5 வீதத்துக்கு மேல் வாக்குகளை ஓர் அரசியல் கட்சியோ அல்லது சுயேச்சைக் குழுவோ பெற்றிருந்தால், அந்த வேட்பாளர் பட்டியலில் மேலதிக வேட்பாளர்களுக்கான கட்டுப்பணத்தைப் பெறமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் அரசியல் கட்சியொன்றின் ஒருவேட்பாளருக்கு ஆயிரத்து 500 ரூபாவும் சுயேச்சைக்குழுவின் வேட்பாளர் ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபாவும் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப)

## திருமலையில் ரயில் மோதி ஒருவர் சாவு

திருகோணமலையிலிருந்து கந்தளாய் நோக்கிப் பயணித்த ரயில் இன்ஜின் மோதியதில் திருகோணமலை, லிங்க நகர் பகுதியைச்சேர்ந்த நபரொருவர் நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறுஉயிரிழந்தவர் திருகோணமலை லிங்க நகர் திருச்செல்வம் வீதியைச்சேர்ந்த இராமலிங்கம் கலைவன் (44 வயது) எனவும் தெரியவருகின்றது.

நபர் ரயில் பாதையினூடாக நடந்து சென்றுகொண்டிருந்தபோது பாலையூற்று பகுதியில் ரயில் மோதி அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

உயிரிழந்தவரின்சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலைப் பிரேத அறையில்வைக்கப்பட்டுள்ளது டன், விசாரணைகளை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப)

## வரி தொடர்பான முன்மொழிவுகள் ஏப்ரல் முதல் அமுலில்!

2018 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட வரி தொடர்பான திட்டம், ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய முன்மொழிவுகள் இந்த வருடம்முதல்அமுல்படுத்தப்படும்என்று நிதிஅமைச்சின் அரச நிதிக் கொள்கை தொடர்பானபணிப்பாளர்நாயகம்ஏ.கே. செனெவிரத்ன தெரிவித்துள்ளார்.

## புத்தாண்டை வரவேற்று விசேட நிகழ்வுகள்





பிறந்திருக்கும் புத்தாண்டை வரவேற்கும் முகமாக கல்முனை இருதயநாதர் தேவாலயத்தில் விசேட பூஜை நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. இந்த நிகழ்வு நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்றுள்ளது.இதன்போது அருட்தந்தை அன்ரனி லியோ தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

2017ஆம் ஆண்டை வழியனுப்பி, புதிதாக உதயமாகியிருக்கும் 2018ஆம் ஆண்டை மிகவும் சந்தோசமான முறையில் வரவேற்கின்றோம் எனவும், இந்த ஆண்டு அனைவருக்கும் வாழ்வில் சுபீட்சம் நிறைந்த ஆண்டாக இருக்க அனைவரும் ஆண்டவனை பிரார்த்திக்க வேண்டும் எனவும் அருட்தந்தை அன்ரனி லியோ ஆசிச்செய்தியில் தெரிவித்துள்ளார். (ப)

## தேர்தல் சட்டங்களை மீறினால் நடவடிக்கை!

தேர்தல் சட்ட திட்டங்களை மீறினால் பாரபட்சமின்றி அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என வவுணதீவு பொலிஸ் பொறுப்பதிகாரி பீ.ரி. நஸீர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவின் சட்டதிட்டங்களை மதித்து மக்களுக்கும் அரசாங்க மற்றும் தனியார் சொத்துக்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்படாதவண்ணம் கலகமற்ற, சுமுகமான முறையில் இந்த தேர்தலை நடத்துவதற்கு வேட்பாளர்களும் பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்எனவவுணதீவு பொலிஸ்நிலையபொறுப்பதிகாரி பீ.ரி. நஸீர் தெரிவித்தார். (ப)

# 27 வருடங்களின் பின் பாதுகாப்புத் தரப்பின் பாவனையிலிருந்த கட்டடம் மீளக் கையளிப்பு!





மட்டக்களப்பு- மயிலம்பாவெளிப் பிரதேசத்தில் பாதுகாப்புத் தரப்பினரின் பாவனையிலிருந்த கட்டடம் சுமார் 27 வருடங்களின் பின்னர் உரிமையாளரிடம் மீள கையளிக்கப்பட்டுள்ளது.நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தக் கையளிப்பு நடவடிக்கை இடம்பெற்றது.

இந்தக்கட்டடத்தை 1990 ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினரும் அதையடுத்து 2009 ஆம் ஆண்டு முதல் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரும் பயன்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் போர் முடிவுற்ற பின்னர் தர்ம செயற்பாடுகளுக்காக சுவாமி ராமதாஸ் நிறுவனம் இக்கட்டடத்தை மீள வழங்குமாறு பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்ததுடன் கவனயீர்ப்புப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டது.

இறுதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து தமது கோரிக்கையை முன்வைத்தமையையடுத்து கட்டடத்தை மீளக்கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத்தெரிவிக்கப்படுகிறது.

இக்கட்டடத்தை மீளக்கையளிக்க உதவிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அத்துடன் ஒத்துழைப்பு வழங்கிய ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் மயிலம்பாவெளி- கருணாலயம் சுவாமி ராமதாஸ் நிறுவனத்தின் முகாமையாளர் ராஜதுரை முருகதாஸ் நன்றி தெரிவித்துள்ளார்.

# மத்தியவங்கி பிணைமுறி ஊழல்வாதிகளுக்கு அதியுச்ச தண்டனை வழங்கப்பட வேண்டும்

## பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கூறுகிறார்

கொழும்பு, ஜன. 02

சர்ச்சைக்குரிய மத்திய வங்கி பிணை முறி விவகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியே பொறுப்புக்கூற வேண்டும்.

மத்திய வங்கி பிணைமுறி ஊழல்வாதிகளுக்கு சட்டத்தின் மூலமாக அதியுச்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.

2020 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் பயணம் இந்த ஆண்டில் இருந்து ஆரம்பிக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சர்ச்சைக்குரிய பிணைமுறி விவகாரம் தொடர்பான ஆணைக் குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மத்திய வங்கி பிணைமுறி ஊழல் விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியே குற்றத்திற்கான முழுமையான பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை நாங்கள் தொடர்ச்சியாக கூறிவந்தோம். இப்போதும் நாங்கள் அதே நிலைப்பாட்டில் இருந்தே கருத்து வெளியிடுகின்றோம்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 50 நாட்களுக்குள் மத்திய வங்கியில் இடம்பெற்ற பெரும் நிதி மோசடி விவகாரத்தில் உண்மைகளை மூடி மறைக்க பல சதித்திட்டங்கள் இடம்பெற்றன.

எனினும், கோப் குழுவின் செயற்பாடுகளின் பின்னர் ஜனாதிபதி மூலமாக அமைக்கப்பட்ட விசாரணை ஆணைக் குழு மூலமாக அவை தடுக்கப்பட்டு இப்போது ஒரு முடிவு எட்டப்பட்டுள்ளது.

விசாரணை ஆணைக்குழு தமது அறிக்கையை ஜனாதிபதிக்கு வழங்கியதுடன் நிறுத்திவிடக் கூடாது. அடுத்தகட்ட நடவடிக்கைகளைத் துரிதமாக முன்னெடுக்க வேண்டும்.

மத்திய வங்கி பிணைமுறி ஊழல் விவகாரத்தில் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். ஏனைய ஊழல்களுக்கு எதிராக குரல் எழுப்பும் நபர்கள் இந்த விடயத்தில் அதிக அழுத்தம் கொடுக்க வேண்டும்.

மத்திய வங்கியில் மேற்கொண்ட கொள்ளை சாதாரண விடயம் அல்ல. இது மக்களின் பணத்தைக் கொள்ளையடித்த மிகப்பெரிய தேசத்துரோக செயலாகும். ஆகவே சட்டத்தின் அதியுச்ச தண்டனையை அந்த குற்றவாளிகளுக்கு வழங்க வேண்டும்.

ஜனாதிபதி தனது அதிகாரங்களை பயன்படுத்தி மத்திய வங்கி ஊழல்வாதிகளையும் அவர்களுடன் தொடர்புபட்ட சகல தரப்புகளையும் தண்டிக்க வேண்டும். இல்லையேல் இந்த நாட்டு மக்கள் ஜனாதிபதிக்கு கொடுத்த மக்கள் வரத்தை அவரே மீறினார் என அமையும்.



2015 ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டை புதிய அரசாங்கத்திற்கு ஒப்படைத்தபோது இந்த நாடு பூரண அபிவிருத்தி கண்ட நாடக இருந்தது.

எனினும் இன்று இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் நாட்டின் நிலைமைகள் முழுமையாக மாற்றம் கண்டுள்ளன. அன்று எமது ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்திகள் அனைத்தும் இன்று நிறுத்தப் பட்டுள்ளன, வேலைத் திட்டங்களை கைவிட்டுள்ளனர், கிரா மங்கள் அழிந்து வருகின்றன.

விவசாயிகளின் வாழ்வாதாரம் அழிக்கப்பட்டு வருகின்றது. இந்த அரசு நாட்டை முழுமையாக சர்வதேச நிறுவனங்களின் கைகளில் ஒப்படைத்து எமது வளங்களைச் சூறையாடும் நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு மாதத்தில் மத்திய வங்கியில் கொள்ளையடித்த நிதியே இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் நகர்வுகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் சகல செயற்பாடுகளும் அர்ஜுன் மகேந்திரன் கொள்ளையடித்த நிதியில் இருந்தே வழங்கப்பட்டு வருகின்றது.

ராஜபக்ஷாக்களின் ஆட்சியில் கொள்ளையடித்தார்கள் எனக் கூறினார்கள், தாங்கள் தூய்மையான அரசியலை முன்னெடுப்போம் எனத் தெரிவித்தனர். ஆனால், இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கமே மிகவும் மோசமான கொள்ளைக்கார ஆட்சியாக மாற்றம் கண்டுள்ளது. எம்மை குற்றவாளிகள் என கூறியவர்கள் இன்றுவரை அவற்றை நிரூபிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

எமது ஆட்சியில் குற்றங்கள் இடம்பெறவில்லை எனக் கூறவில்லை, எனினும் ஒருசிலர் செய்த குற்றங்கள் காரணமாக பொறுப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மஹிந்த ராஜபக்ஷவை தண்டிக்கவே எமது மக்களும் வாக்களித்தனர்.

எனினும், நாட்டுக்குத் தகுதியான தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தான் என்பதை அவர் ஆட்சியில் இல்லாத போதே மக்கள் விளங்கிக் கொண்டனர்.

ஆகவே, இப்போது நாம் ஆரம்பித்துள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொதுஜன முன்னணியின் வெற்றியில் இருந்து நாம் மீண்டும் எமது பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்.

அதேபோல், 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கும் போது மஹிந்த ராஜபக்ஷவை நாட்டின் பிரதமராக்கும் எமது பயணத்தை ஆரம்பிப்போம்.

அடுத்த பொதுத் தேர்தலில் நாட்டின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே. அதில் எந்த மாற்றமும் இல்லை. அதற்கான போராட்டமே ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

(கு)

## 30 சதவீத மாணவருக்கு பல்கலைக்கழக வாய்ப்பு!

கொழும்பு, ஜன. 02

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த 30 சதவீதமான மாணவர்களை பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது

இது தொடர்பான விண்ணப்பங்கள் அடங்கிய கைநூல் அடுத்த வாரத்திற்கு முன்னதாக வெளியிடப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது வெளியிடப்பட்ட பின்னர், ஒரு மாத காலப் பகுதியில் இணையத்தளத்தின் ஊடாக மாத்திரமே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

(க)

## யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களின் மரணங்கள் குறித்து முறையான விசாரணை

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த மூன்று மாத காலமாக பதிவான மரணங்கள் குறித்து முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன அபாயகர நோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் அனில் திசாநாயக்கவுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இதற்கமைவாக, வடமாகாணத்தில் சுகாதார அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த விசாரணைகளுக்கு அமைவாக, இந்தக் காலப் பகுதியில் ஏற்பட்ட மரணங்கள் அனைத்தும் தெளிவான நோய் நிலைமை காரணமாக இடம்பெற்றன என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.





மரணங்கள் அனைத்தும் பல்வேறு நோய்கள் காரணமாக ஏற்பட்டமை வைத்திய ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த மரணங்கள் ஒரு குடும்பத்திலோ அல்லது அவர்களது உறவினர்கள் மத்தியிலோ ஏற்படவில்லை. சம்பந்தப்பட்ட மரணங்கள் அடையாளம் காணப்படாத நோயால் இடம்பெற்றிருக்கின்றன எனப் பரவும் வதந்தியில் எந்தவித உண்மையும் இல்லை என்பது விஞ்ஞானரீதியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அபாயகர நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.







## புத்தபெருமான் மஹியங்கனைக்கு விஜயம் செய்த தினம் நேற்றாகும்

கொழும்பு, ஜன. 02

புத்தபெருமான் மஹியங்கனைக்கு விஜயம் செய்த தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. ஜனவரி முதலாம் திகதி. இதேபோன்று 'துருது பச லொஸ்வக' என்ற நோன்மதி தினமாகும். இத்தினம் நாட்டு பௌத்த மக்களுக்கு முக்கிய நாளாகும்.

புத்தபெருமான் இதுபோன்ற நாளிலேயே மஹியங்கனைக்கு விஜயம் செய்தார் என்று இலங்கை அமரபுர மஹாநிக்காயவின் மஹாநாயக்கர் சங்கைக்குரிய வண கொட்டுகொட தம்மாவாச தேரர் தெரிவித்துள்ளார்.

(க)

# சிறந்த பெறுபேற்றைப் பெற்ற விழிப்புலன் இழந்த மாணவி

சுன்னாகம், ஜன. 02

சுன்னாகம் வாழ்வக மாணவி செல்வி யானுஜா செல்வராஜா ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் 2ஏ,சி பெற்று சித்தியடைந் துள்ளார்.

தமிழ்,இந்து சமயம் ஆகிய பாடங்களில் 'ஏ' சித்தியும், அரசியல் விஞ்ஞானத்தில் 'சி' சித்தியும் பெற்றஇவர் கிளி நொச்சி கனகபுரத்தைச் சேர்ந் தவர். வாழ்வகத்திலிருந்து தெல்லிப்பழை யூனியன் கல் லூரிக்கு சென்று கல்வி கற்று வருகின்றார். விழிப்புல னிழந்த இந்த மாணவி கலைப் பிரிவில் தெரிவாகி யாழ்.பல் கலைக் கழகத்தில் தனது பட்டப் படிப்பை மேற்கொள்ளவுள்ளார். இம் மாணவியின் சிறந்த பெறு பேறு பற்றி வாழ்வகத்தின் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். (இ)

# கொலன்னாவ குப்பை மேட்டில் மீண்டும் தீ!



கொழும்பு, ஜன. 02

கொலன்னாவை ரகுல வித்தியாலயத்துக்கு அருகி லுள்ள மீதொட்டமுல்ல குப்பை மேட்டின் ஒரு பகுதி யில் நேற்று தீப்பிடித்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் குப்பைச் சரிவு அனர்த்தம் ஏற்பட்ட தும் இதே பிரதேசத்தில் என பொலிஸார் குறிப்பிட்டுள் ளனர்.

நேற்று முற்பகல் 11 மணி யளவில் இந்தத் தீ ஏற்பட் டுள்ளது. இதனை அணைப் பதற்குத் தற்பொழுது 2 தீய ணைப்புப் படை வாகனங் களும் 3 பவுஸர்களும் ஈடு படுத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# ஒரு கோடியே 80 லட்சம் ரூபா நிதியில் மல்வானையில் வடிகாலமைப்புத் திட்டம்!

கொழும்பு, ஜன. 02

மல்வானை அல்-முபாறக் கனிஷ்ட பிரிவுக்கான இணைப்பு பாதையை அபி விருத்தி செய்து, அதனுடன் இணைந்த வடிகாலமைப்புத் திட்டத்தை நவீன முறையில் புனர் நிர்மாணம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படு கின்றன.

இதனை நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச் சர் ரவூப் ஹக்கீம் பார்வை யிட்டார்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் ஊடாக ஒரு கோடியே 80 லட்சம் ரூபா நிதியில் இத் திட்டம் அமுல்படுத்தப் பட்டு வருகிறது.

பியகம சுதந்திர வர்த்தக வலயம் உள்ளிட்ட மல்வா னையின் மத்திய பகுதியி லுள்ள மழைநீரை களனி கங்கையில் கொண்டு சேர்ப் பதற்கு இந்த வடிகாலமைப் புத் திட்டம் உதவியாக இருக் கும்.

இந்தத் திட்டம் செய்து முடிக்கப்பட்ட பின் வல்கம, வேகந்த உள்ளிட்ட பகுதி களில் தேங்கி நிற்கும் நீர் சீராக வடிந்துசெல்வதற்கு உதவும் என்றும் தெரிவிக் கப்படுகிறது. (க)

# மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்**- வலந்தலை சந்தி, சிவகாமி அம்மன் கோவிலடி, ஆலடி, மருதபுரம், வியாவில், கருங்காலி, காரைநகர் சிவன் கோவிலடி, பொன்னாலை கிருஷ்ணன் கோவிலடி, பொன் னாலை வீட்டுத்திட்டம் ஆகிய இடங்களிலும் -

**வவுனியா பிரதேசத்தில்** - அரசமுறிப்பு கிராமம், ராஜ் மீன்பிடிக் கூட்டுத்தாபனம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியி யலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார்.

# அண்ணமார் ஆலயம் கிராம ஊர்வலம் நாளை

தெல்லிப்பழை கிழக்கு, சித்தியம்பதியுறை ஸ்ரீ அண்ணமார் தேவஸ்தான கிராமப் பிரதட்சணா விழா (கிராம ஊர்வலம்) நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு விசேட பூசை களைத் தொடர்ந்து இடம் பெறும்.

ஆலயத்தில் இருந்து அண்ணமார் பெருமானின் திருவூர்வலம் ஆரம்பமாகி கிராமங்கள் ஊடாகப் பவனி வந்து, இரவு ஆலயத்தை அடையும். இரவு 8 மணிக்கு விசேட பூசை, வழிபாடுகள் இடம்பெறும். (இ)

# வாராந்தம் கூட்டுறவுக் கொடியேற்றல்




வடமாகாண கூட்டுறவு ஆணையாளரின் சுற்றுநிருபத்துக்கு ஏற்ப, ப.நோ.கூ.சங்கத்தின் அலுவலகங்களில் கூட்டுறவுக் கொடியை ஏற்றி கூட்டுறவுக் கீதம் இசைக்க வேண்டும்.

இந்தக் கூட்டுறவுக் கொள்கைக்கு அமைவாக தென்மராட்சி மேற்கு பலநோ.கூ.சங்கத்தின் தலைவர் இ.கந்தசாமி கொடியை ஏற்றி வைத்தார். இந்தக் கொடியேற்ற நிகழ்வு வாராந்தம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்று தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ

# தினசரி ராசி பலன் (02.01.2018)

*2018ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மார்கழித் திங்கள் 18ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பூரணைத்திதி காலை 7.54 மணிவரை அதன்மேல் பிரதமைத்திதி பி.இ.4.08மணிவரை பின்னர் துவிதியை. நட்சத்திரம்.திருவாதிரை பகல்11.47மணிவரை பின்னர் அசுபயோகம்.*

**ராகுகாலம்** - *மாலை 03.07 மணி முதல் 04.33மணிவரை*

**சுபநேரம்** - *பகல் 11.04மணிமுதல் 12.34மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *மார்கழி மாத தேய்பிறை பிரதமை*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *புனர்பூசம்*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** மத்திமமான நாள். பொருள்வரவு சுமாராக இருக்கும். வியாபாரம் சுமாராக நடைபெறும். குடும்பத்தில் இணக்கமான போக்குத் தென்படும். பணம், கொடுக் கல்,வாங்கலில் கவனம் தேவை.

**ரிஷபம்** ஆக்கபூர்வபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு திருப்தியைத் தரும். குடும்பத்தில் இனிய நல்லுறவு நிகழும். சகபணியாளர்கள் ஒத்துழைப்புடன் தொழிற் பிரிவினர் வளர்ச்சிநிலையைக் காண முடியும்.

**மிதுனம்** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக் கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெற முயற்சி கள் மேற்கொள்ளப்படும். பெண்களும் சிறுவர்க ளும் அணிமணிகள் கிடைக்கப்பெற்று மகிழ்வார்கள்.

**கடகம்** கவலையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகள் உண்டாகும். உறவி னர்களின் வரவால் செலவுகள் அதிகரிக்கும். தொழி லில் பிரயாசை அதிகமாகும்.

**சிம்மம்** உயர்வான நாள். வருமானம் உயரும். குடும்ப ஒற் றுமை மேலோங்கும். சகோதர வழியால் உதவிகள் கிடைக்கும். வேலை பார்க்கும் பெண்களுக்கு தொழில் செய்யும் இடங்களில் வரவேற்பு அதிகரிக்கும்.

**கன்னி** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சமமாக இருக்கும். வியாபாரம் ஏற்றமும், இறக்கமு மாக நடக்கும். தொழிலில் உழைப்பும், அலைச்சலும் அதிகரிக்கும்.

**துலாம்** சுபீட்சமான நாள். பணம் தாராளமாக இருக்கும். உறவினர் வீட்டுச் சுப நிகழ்ச்சிகளில் கலந்து மகிழ் வார்கள். சிலருக்கு தொழில் கிடைத்து வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.

**விருச்சிகம்** சஞ்சலமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக் கும். குடும்பத்தில் சஞ்சலநிலை காணப்படும். செய் யும் தொழிலில் இடையூறுகள் காணப்படும். மாணவர் களின் உயர்கல்வி பாதிப்படையும்.

**தனுசு** மேன்மையான நாள். பொருளாதாரம் வளர்ச்சி அடையும். குடும்ப ஒற்றுமை பலப்படும். தொழிலில் மேன்மை உண்டாகும். மாணவர்கள் கல்வியில் உயர்வடைவார்கள்.


**மகரம்** இனிமையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக் கும். குடும்பத்தில் இனிமை கொலுவிருக்கும். நண்பர் களுடன் சிலர் சுற்றுலாப் பயணத்தை மேற்கொள் வார்கள். ஆடை,ஆபரண சேர்க்கை உண்டாகும்.

**கும்பம்** மேன்மையான நாள். பொருளாதாரம் மேன்மை அடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வியா பாரம் விறுவிறுப்பாக நடக்கும். சுயதொழில் மேன்மை அடையும்.

**மீனம்** யோசனையான நாள். பணம் தட்டுப்பாடாக இருக் கும். குடும்ப உறுப்பினர்களின் சுகவீனத்தால் கவலை உண்டாகும். தொழிலில் கடின உழைப்பு இருக் கும்.

**சந்திராட்டமநாள்: விசாகம் 4 ஆம் பாதம், அனும், கேட்டை ஆகிய நட்சத் திரங்களில் பிறந்தோர் நற்கருமங்களைத் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்.
கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர்.
அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமா கின்றது.
'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 54

## தயைகூர்ந்து மன்னியுங்கள்!

### உல்லியன் நொல்லை அம்மன் கோயில்

எங்களது வடமராட்சிக் கம்பன் கழக அமைப்பாளரான தயாபரன் தான், இவ்வாலயச்சொற்பொழிவினை ஒழுங்கு செய்தான். எனது பேச்சிற் குக் கிடைக்கும் வெற்றியைப் பார்த்து, என்னைவிட மகிழ்பவர்களில் இவனும் ஒருவன். வடமராட்சிப் பக்கம் பேச் சென்றால், தயாபரன் வீட்டில் எனக் காக, விதம்விதமாய் உணவு வகைகள் செய்து வைத்திருப்பார்கள். நானும் உடன் வருபவர்களும், அங்கு சென்று பசியாறிய பின்தான் நிகழ்ச்சிகளுக்குச் செல்வோம். அக்கழகத்தின் தலைவர், ஆசிரியர் மன்னவனும் தயாபரனும், எனது உரிமைக்காரர்களாய்த் தம்மை இனங்காட்டி, என்னை நிகழ்ச்சி களுக்கு அழைத்துச் செல்வர்.

நிகழ்ச்சிகளின் முடிவில் மன்ன வனின், வெளிப்படையான விமர்சனம் எப்போதும் காத்திருக்கும். எங்களைக் காரில் அனுப்பிவிட்டு, இளையவனான தயாபரனை 'பாரில்' இருத்தி, மூத்த வரான மன்னவன் பின்னால் சைக் கிளில் வரும் காட்சி மறக்க முடியாதது. இவ்வாலயத்தில்தான் வடமாராட்சியில் பேச்சைக் கேட்கவென, முதன்முதலாக பெரும் மக்கள் கூட்டம் கூடிற்று. மேடையில் இருந்து நான் பார்த்தால், என் கண்ணுக்குத் தெரியும் தூரம்வரை, மக்களின் தலைகளே கம்பளமாய் விரிந்திருக்கும்.

* * *

### நெல்லியடித்தடங்கன்புளியடி முருகன் கோயில்

இது எங்கள் தயாபரனுடைய ஆலயம். இவ்வாலய நிர்வாகத்தில் இவன் முக்கிய பங்கு வகித்தான். இங்கு நிகழ்சிகளை நடத்தும் பொறுப்பு இவனுடையதாய்த்தான் இருந்தது. இவனுக்குப் பிடித்த இரண்டு நிகழ்ச்சி களில், தவில் மேதை தட்சணாமூர்த் தியின் மைந்தனான, உதயசங்கரது மேளக்கச்சேரி ஒன்று. தயாபரன் தனது மகனுக்கும் சங்கர் என்றே பெயர் வைத்தான். அடுத்து அவனுக்குப் பிடித்தது என்னுடைய பேச்சு நிகழ்ச்சி. இவ்வாலயச் சூழலில் சில கம்பன் விழாக்களையும், தயாபரன் மிக வெற்றி கரமாக நடத்தினான். அதைவிட இந்த ஆலய முன்றிலில், எங்களின் கம்பன் கழகத்தாரால் நடத்தப்பட்ட, பட்டிமண்டபம் ஒன்றும் குறிப்பிடத் தக்கது. ஆலயத்தின் வீதி முழுவதிலு மாக, கூட்டம் நிரம்பியிருந்து கேட்ட பட்டிமண்டபம் அது.

இவ்வாலயத்தில் ஒரு கந்தசஷ்டி நிகழ்ச்சியின் போது, நான் நிகழ்த்திய கந்தரநுபூதித் தொடர் விரிவுரை, பலர தும் பாராட்டுப் பெற்றது. அந்நிகழ்வின் இறுதிநாளில் யாழ். பல்கலைக் கழகத் தின், அப்போதைய துணைவேந்தரான துரைராஜாகலந்து கொண்டு, என்னைப் பாராட்டினார். எனக்குத் தலைப்பாகை எல்லாம் வைத்து தயாபரன் பெரிய மரியாதை செய்தான்.

முறைப்படி தத்துவம் படிக்காத அந்த நாளில், எனக்குத் தெரிந்த தத்துவங்களை வைத்துக்கொண்டு பெரிய தத்துவ உரை நிகழ்த்துவதாய் நினைந்து, அப்பேச்சினை நிகழ்த்தி னேன். பின்னாளில் எனக்குத் தமிழை யும் தத்துவத்தையும் முறைப்படிக் கற்பித்த, பேராசான் இலக்கண வித் தகர் நமசிவாய தேசிகர், அந்த ஆறு நாள்களும் சபையில் வந்திருந்து, உரைகளைக் கேட்டதோடல்லாமல், நிறைவு நாளில் என்னைப் பாராட்டவும் செய்தார். அப்போது நான் தத்துவமாய் நினைந்து பேசியவற்றைக் கேட்டு, அவர் என்ன நினைந்தாரோ? என எண்ணி இப்போதும் நாணுவேன்.

* * *

### உடுப்பிட்டி பிள்ளையார் கோயில்- தங்கராசா ஆசாரியார்

இவ்வாலயத்திலும் எனது இராமா யணத் தொடர் விரிவுரை, இரண்டு, மூன்று ஆண்டுகள் தொடர்ந்து நடை பெற்றது. தங்கராசா பத்தர் எனும் நகை செய்யும் பெரியவர் தான், அவ்வாலயத்தை அக்காலத்தில் நிர்வ கித்து வந்தார். பக்தியும் அடக்கமும் ஆளுமையும் செல்வமும் மிக்கவர் அவர்.எனது பேச்சை மிகவும் விரும்பி, தொடர்ந்து தனது ஆலயத்தில் பலதரம் என்னைப் பேச வைத்தார். அங்கும் பெருந்தொகையான மக்கள் கூடி, சொற்பொழிவுகளைக் கேட்டனர்.

அக்காலத்தில் புலிகள் இயக்கத் திற்கும் எமக்கும் இடையில், சிறிய இடைவெளி ஏற்பட்டிருந்தது. இவ் வாலய வீதிக்கு அப்பால், புலிகளது பெரிய முகாம் அமைந்திருந்தது. நான் இராமாயணம் பேசும்போது பெருந் தொகையான மக்கள், அவர்களது முகாம் எல்லைவரை கூடியிருந்து கேட்பார்கள். அப்போது முகாமிற்குள் இருக்கும் புலிகள் இயக்க உறுப்பினர் களும், மதிலால் எட்டிப்பார்த்து பெருங் கூட்டமாய் நின்ற படி, என் பேச்சை விரும்பிக் கேட்பதை, பார்த்து மனதிற் குள் இரசிப்பேன்.

* * *

### கலட்டி அம்மன் கோயில்

இவ்வாலயத்தில் நடந்த எனது இராமாயணத் தொடர் விரிவுரையை, நான் மட்டுமல்ல, யாழ்ப்பாணமே மறக்க முடியாது என நினைக்கிறேன். அந்த அளவுக்கு வெற்றிகரமாய் நடந்த நிகழ்ச்சி இது. எங்கள் கழகத் தோடு தொடர்புபட்டிருந்த, கலட்டி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த, தர்மராஜா(அப்பர் அண்ணை) எனும் நண்பரே, இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தார். திருவிழாவை ஒட்டி அவர் என்னைப் பேச அழைத்திருந்தார். முதல் நாள் நான் பேசியபோது, கோயில் மண்டபத்திற்குள் ஐம்பது பேரளவி லேயே இருந்து பேச்சைக் கேட்டனர். அடுத்தடுத்த நாள்களில், மண்டபம் நிரம்பி, பிறகு கோயில் வீதி நிரம்பி, பின்னர், அந்த வட்டாரத்து வீதி களெல்லாம் நிரம்பும் அளவுக்கு, கூட்டம் வரத் தொடங்கியது. தர்மராஜா வுக்கு உற்சாகம் பிடிபடவில்லை. சனம் திரண்டதைக் கண்ட அவர், திருவிழா முடிந்த பிறகும் சொற் பொழிவை நீட்டித்தார்.

கிட்டத்தட்ட முப்பது நாள்களுக்கு மேலாக அங்கு பேசியதாய் ஞாபகம். மிகத் தூர இடங்களிலிருந்தும், மக்கள் சைக்கிளிலும், ஓட்டோக்களிலும் வந்து குவிந்தனர். வாழ்க்கைச் சம்பவங் களையும் தொகுத்து இராம காதையைச் சொல்வேன். அடுத்த நாள் சந்தை, தேநீர்க்கடை, சைக்கிள் கடை என, எல்லா இடங்களிலும் நான் சொன்ன கதைகள் மக்களால் பேசப்படும். பேச்சுத் தொடங்குகிற நேரத்தில் நாலா திசைகளிலும் இருந்து, வீதிகள் நிரம்ப மக்கள் வருவார்கள். நானே ஆச்சரியப்பட்டுப் போன நிகழ்ச்சி அது. உரைகளைக் கேட்ட மக்கள், தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவென, நிறைவு நாளில் தரமராஜா ஒரு பெரிய பெட்டியை மேடைக்குமுன் வைத்தார். அதற்குள் ஆயிரக்கணக்கான கடிதங்கள் விழுந்தன. இன்றும் எங்கள் கம்பன் கோட்டத்தில அக்கடிதங்கள் இருக்கின் றன.

நிகழ்ச்சி முடியுமன்று, எங்கள் கழகத் தாரை இணைத்து ஒரு பட்டிமண்ட பத்தினை நடத்தினேன். பட்டிமண்ட பத்தில் கலந்துகொண்ட அத்தனை பேருக்கும், தர்மராஜா தங்கப் பதக்கங் கள் சூட்டிக் கௌரவித்தார். இப்போதும் நான் வெளிநாடுகளுக்குச் செல்லும் போதெல்லாம், இந்நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டுப் பலர் என்னோடு பேசு வார்கள். அந்நிகழ்ச்சி முடிந்த பின்பு, தர்மராஜா எனக்குத் தந்த சன்மானம் போதாது என நினைந்த நான், அவர் என்மேல் வைத்திருந்த அன்பையும் மதிப்பையும் நினையாது, சற்றும் பெருந் தன்மையில்லாது, என் குறையை அவருக்கு மற்றொருவர் மூலம் தெரி யப்படுத்த, அதைப் பெரிதுபடுத்தாத அவர், பெருந்தன்மையோடு அப்பிரச்சி னையைப் பண்பாய்க் கையாண்டு, என்னில் சிறிதும் பகை காட்டாமல் என்னை நாண வைத்தார்.

* * *

### புலிகளை முரண்படவைத்த நிகழ்ச்சி

இந்நிகழ்ச்சி எனக்கும், எங்கள் கழகத்திற்கும் பெரும் பாதிப்பை ஏற் படுத்தியது. ஒரு தனி மனிதனுக்கென இத்தனை ஆயிரம் பேர் கூடியது, புலிகள் இயக்கத்தைப் பாதித்தது. மக்களை நாம் போராட்டத்திலிருந்து திசைதிருப்பி விடுவோமோ என்று, அவர்கள் இந்நிகழ்ச்சியைப் பார்த்து அஞ்சத் தொடங்கினர். புலிகளுக்கும் எங்களுக்குமான முரண்பாடுகள் இங்கு தான் தொடங்கின.

* * *

### யாழ். பேச்சுலகை மாற்றிக் காட்டினேன்

எனது ஆரம்ப காலப் பேச்சனு பவங்கள் கசப்பானவை. அவை பற்றி முன்னரே எழுதியிருக்கிறேன். அக் காலத்தில் பேச்சாளர்களை யாரும் ஒரு பொருட்டாய் மதிப்பதில்லை. ஆலய நிகழ்ச்சிகளில் மற்ற நிகழ்ச்சிக்காரர் களுக்குக் கொடுக்கும் மதிப்பில், ஆயிரத்தில் ஒரு பங்கைத் தானும் பேச்சாளர்களுக்கு கொடுக்க மாட்டார் கள். மற்ற நிகழ்ச்சிக்காரர்கள் வர வாகன ஒழுங்கு செய்து கொடுப்பார்கள். பேச் சாளர்கள் சைக்கிளில் தான் சென்று பேச வேண்டும். மற்றைய நிகழ்ச்சிக் காரர்களின் வசதிக்கேற்ப, பேச்சாளர் களின் நிகழ்ச்சி இஷ்டத்திற்கு உபய காரர்களால் மாற்றப்படும். முக்கிய நிகழ்ச்சிக்காரர்கள் வந்து விட்டால், பேச்சாளர்களின் பேச்சு உபயகாரர்களால் இடைநிறுத்தப்படும். பேச்சாளர்களுக்கு என்றுமே சன்மானம் வழங்கப்படுவ தில்லை. பேச்சின் முடிவில் கொடுக் கப்படும் காளாஞ்சி தான் சன்மானம். பேச்சாளர்களும் தாம் சமயத் தொண்டு செய்வதாய்ச் சொல்லி, அதற்கு நாங் கள் பணம் வாங்குவதில்லை என பொய்மை செய்வார்கள். பணம்

(தொடரும்...)

# மூன்று தவறுகள்



கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

உலகம் உண்மையைவிட்டு வெகு தூரம் சென்று கொண்டிருக்கிறது. இப்படியே போனால் என்றோ ஒரு நாள் உண்மை நம்மைச் சுடத்தொடங்கும். சத்தியம் நம்மைச் சுடத்தொடங்கினால் நம் சந்ததியின் நிலை என்னாகும்?

திடீரென ஏன் இவ் விரக்தி எனக் கேட்கிறீர்களா? அண்மையில் யாழ். மண்ணில் நிகழ்ந்த ஒரு சம்பவமும், அது சார்ந்து எழுந்த எதிர் அலைகளுமே, மேல் விரக்திக்கான அடிப்படைக் காரணங்கள். பிழையான முன்னுதாரணங்களைப் பெரியவர்களே நிகழ்த்தினால், பொது மக்களை யார்தான் நெறிப்படுத்துமுடியும்?

அதனால்தான் மனம் அதிர்ச்சிக்குள்ளாகிறது. சந்தர்ப்பத்திற்கேற்ப பேசுவதே சத்தியம் என்றாகிவிட்டால், நாளை அதன் எதிர் விளைவுகளைச் சந்தித்து வருந்தும்போது, நாம் சொல்லும் சத்தியமும் பொய்யாய்க் கணிக்கப்படும். இலாபமோ நட்டமோ சரியைச் சரி என்று சொல்லவும், பிழையைப் பிழை என்று சொல்லவும் பழகினால்தான், மற்றவர்களிடம் நமக்கான நீதியைக் கோரும் தகுதி உண்டாகும். இவ்விடயத்தில் மக்கள் சற்றுப் பின்னின்றாலும், தலைவர்கள் உறுதியாகவும் தெளிவாகவும் நின்று, அவர்களை வழிப்படுத்துதல் அவசியம். அதுதான் தலைமைக்கான இலட்சணம்! தமிழ் இனத்தில் அத்தலைமை இலட்சணம் கொண்டவர்களின் தொகை, அருகிவருவது நம் துரதிஷ்டமே.



> துறவியின் பூதவுடலுக்கு எம்மவர்கள் மரியாதை செய்து பேரினத்தாரை நாணம் கொள்ளச் செய்திருக்கலாம்

மூன்று தவறுகள் என்று கட்டுரைக்குத் தலைப்பிட்டுவிட்டு, சென்றவாரப் பாதிப்பொன்றைப் பற்றி எழுதப்போவதாய்த் தொடங்கிய நான் வேறேதேதோ பேசுவதாய் நீங்கள் நினைப்பீர்கள். உங்களை அதிகம் குழப்ப விடாமல் விடயத்திற்கு வருகிறேன். சென்ற வாரச் சம்பவம் என்று நான் சொன்னது, யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த நாகவிகாராதிபதியின் மறைவையும், அதுசார்ந்து எழுந்த சர்ச்சைகளையுமேயாம்.

அச்சம்பவம் சார்ந்த மூன்று தவறுகளைப் பற்றியே, இக்கட்டுரையில் எழுதப்போகிறேன். மறைந்த விகாராதிபதியின் இறுதிக்கிரியைகளை, யாழ் முற்றவெளியில் செய்வதற்கான ஆயத்தங்கள் நடந்தபோது, அதுபற்றிய சர்ச்சை வெடித்திருக்கிறது. நம் தமிழ்த் தலைவர்கள் சிலர், வரப்போகும் தேர்தலை மனதில் வைத்துக் கொண்டு, அவ்விடத்தில் விகாராதிபதியின் இறுதிக்கிரியைகளைச் செய்யக் கூடாது என்றும், அங்ஙனம் செய்யப்படின் அது நம் இனத்திற்கும் நமது மண்ணின் சுயாதிபத்தியத்திற்கும் எதிரானது என்றும் குரல் எழுப்பி, தமது இன உணர்ச்சியைச் சற்று மிகைப்படவே காட்ட முற்பட்டிருக்கின்றனர்.

இனத்தையும் இனஉரிமையையும் காக்கும் தீவிரத் தலைவர்களாய்த் தம்மை இனங்காட்ட, அவர்கள் முயன்றிருக்கின்றமை வெளிப்படையாய்த் தெரிகிறது. தாமும் உணர்ச்சிவசப்பட்டு மக்களையும் உணர்ச்சிவசப்பட வைக்க முயற்சித்த, இத் தலைவர்களின் செயற்பாட்டில் எனக்குச் சிறிதும் உடன்பாடில்லை.

இதை நான் சொன்னதும் ஆகா! இவன்தான் இனத்துரோகி என, என்னை நோக்கி விரல் நீட்டப் பலர் தயாராவது தெரிகிறது. அத்தகையோர் பற்றி நான் சிறிதும் கவலைப்படப் போவதில்லை. மற்றவர்களைத் திருப்திப்படுத்தவும் மற்றவர்களை உணர்ச்சிவசப்படுத்தவும், தைச் சொன்னால் மக்களுக்குப் பிடிக்கும் என நினைந்து அதைச் சொல்லவும், எனது வேலைகள் அல்ல. மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக பொய்யை மெய்யாக்கி உரைக்க, நான் ஓர் அரசியல்வாதியும் அல்லன். இந்த மக்களோடு வாழ்ந்தவன், மக்களால் வாழ்ந்தவன் என்ற உணர்வோடு, நான் கற்ற தமிழ் எனக்குக் கற்பித்த அறவியல் படையை வைத்தே, கருத்துக்களை எழுதுகிறேன்.

என்னை அறிவார் இதனை அறிவார் அறியார் அறியாரே!

நம் தமிழினம், தனது சமுதாயத்தலைமையைத் துறவிகளுக்கு வழங்கி, அவர்களைப் பெருமைப்படுத்தியது. அதனால்தான் தமிழ்த்தாய் வாழ்க்கைநெறியை வகுத்த வள்ளுவக்கவுள், இறை (கடவுள் வாழ்த்து), இறையால் அமைக்கப்பட்ட இயற்கை (வான் சிறப்பு) என்பவற்றைப் பாடி, அதற்கடுத்ததாகத் துறவிகளது பெருமை கூறும், நீத்தார் பெருமை என்னும் அதிகாரத்தை அமைத்தார். அங்ஙனம் துறவிகளை மதிக்கும் தமிழினத்தவர்களாகிய நாங்கள், ஒரு துறவியின் மறைவை வைத்து சர்ச்சைகள் நடத்தவும், அரசியல் பேசவும் முற்பட்டமை மிகப்பெரிய தவறென்பது என் கருத்தாகும்.

வள்ளுவர் சொன்னது உண்மைத் துறவிகளைப் பற்றி, இவர்களெல்லாம் உண்மைத் துறவிகளா? உங்களில் சிலர் கேட்க நினைப்பது புரிகிறது.

இக் கேள்விக்கு என்னால் மட்டுமல்ல வேறு யாராலும் கூட சரியான பதிலை உரைத்துவிட முடியாது. துறவின் உண்மைத்தன்மையை அவ்வத்துறவிகளின் நேர்மை நெஞ்சே எடுத்துரைக்க முடியும். அதனால் தான் பொய்த் துறவிகளைப் பற்றிஉரைக்கவந்த வள்ளுவர், அவரது பொய்மையைக் கண்டு உலகத்தார் சிரிப்பர் என்றுரைக்காமல், அவருள் பதிந்திருக்கும் பஞ்சபூதங்களும் சிரிக்கும் என்று உரைத்தார். வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும். துறவியின் தூய்மைக்கு அவரது அகமே சாட்சியன்றே, வள்ளுவரின் கருத்தாய் இருந்திருக்கிறது.

நான் இங்கு சொல்லவருவது துறவிகளுக்கான முக்கியத்துவம் பற்றியது அல்ல, துறவுக்கான முக்கியத்துவம் பற்றியது. ஒரு மதம் சார்ந்து துறவியை இனங்காணப்பட்ட ஒருவரை, மதிப்பதும் மரியாதை செய்வதும் தமிழர்களாகிய நமது கட்டாய கடனாம். அப்பண்பை மக்கள் மத்தியில் ஊட்ட வேண்டியவர்கள் தலைவர்கள். இங்கோ அவர்களே அப் பண்பை நிராகரிக்க மக்களைப் பழக்குகிறார்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ்தேவானந்தா, வட மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் எனப் பலரும், விகாராதிபதியின் இறுதிச்சடங்குகளுக்கான தமது எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள்.

வழக்கமாக உண்மையைத் துணிந்து உரைக்கும் வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர், தவராசாகூட, இவ்விடயம்பற்றிப்பட்டும்படாமல் பேசி இருக்கின்றமை மனவருத்தம் தருகிறது. அவர் இத் தவறான முன்னுதாரணத்தை வலிமையாய்க் கண்டிக்காமல், அதிகாரமுள்ள முதலமைச்சரும் மாநகரசபை ஆணையாளரும் இதனைத் தடுத்திருக்கலாமே, என்று ஒப்புக்குச்சப்பாய் ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். இவ்விடயத்தில் மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் அவர்களது அறிக்கைதான், சற்றேனும் நேர்மையாய் அமைந்து ஆறுதல் தருகிறது.



எங்களது தலைவர்கள் உயிர்நீத்த போதும் அவர்களது உடல்கள், பொது இடங்களில் தகனம் செய்யப்பட்டன. பௌத்த மதத்திற்கு நாங்கள் மரியாதை செலுத்தத் தயார். ஆனால், அம்மரியாதையைப் பயன்படுத்தி, அம்மதத்தை ஆக்கிரமிப்பின் அடையாளமாக்க எவரும் முனையக்கூடாது என்ற, சிவாஜிலிங்கத்தின் அறிக்கையில் தான், சற்றுப் பொறுப்புணர்ச்சியுடன் கூடிய நிதானத்தைக் காண முடிந்தது.

எதிராளிகளின் நிலைமை பற்றியும் தகுதி பற்றியும் அதிகம் பேசும் நம் தலைவர்களில் பலருக்கு, தமிழினம் இன்றிருக்கும் தகுதி பற்றியும் நிலைமை பற்றியும் தெரியாதிருப்பது பெரிய விந்தை. உண்மை நிலை உணராமல் தம் சுயநலத்திற் காய் அத்தலைவர்கள் உரைக்கும் பொய்மை வாதங்களை, நம் இனத்தார் பலர் இனஉணர்ச்சியாய்ப் போற்றி நிற்பதும், இவர்களே உண்மைத் தலைவர்களென இப்பொய்மையாளர்களை உச்சிமேல் வைத்து உவப்பதும், நம் இனத்தின் எதிர்காலம் பற்றிய ஐயத்தைத் தொடர்ந்தும் ஊட்டுகின்றன. அதுவென்ன தமிழினத்தின் நிலைமை என்கிறீர்களா?

திரும்பத் திரும்பப் பலதரம் சொல்லிவிட்டேன். அச்செய்தி இதுவரை ஒருவர்க்கும் உறைத்ததாய்த் தெரியவில்லை. அதனால் மீண்டும் ஒருதரம் அச்செய்தியை இக்கட்டுரையிலும் பதிவு செய்கிறேன்.

உரிமை வேண்டி, சிறுபான்மை இனத்தவர்களாகிய நாங்கள், பேரினத்தாரோடு மோதிக் கொண்டிருக்கிறோம் என்பது முதல் பிரச்சினை. சாம, பேத, தானம் தாண்டி தண்டம் வரை சென்று, படுதோல்வி அடைந்து நிற்கிறோம்; என்பதை, இதுவரை நாம் உணராமல் இருப்பது இரண்டாவது பிரச்சினை. உலக நாடுகள் காட்டிய கருணையால்தான் இன்று இம்மண்ணில் இந்தளவேனும் நம்மால் வாழ முடிகிறது.

இன்று அந்த உலகநாடுகளின் ஆதரவையும்,





மெல்ல மெல்ல நாம் இழந்து கொண்டிருக்கிறோம் என்பது மூன்றாவது பிரச்சினை. இந்த உண்மையை, சென்றவாரம் பட்டவர்த்தனமாக, மாகாணசபை அமைச்சர் அனந்தியே கூறியிருக்கிறார். தோற்ற நாங்கள், பிற நாடுகளின் நட்பையும் ஆதரவையும் பெருக்கிக் கொள்ளாமல், வென்றவனின் திமிர்த்தனத்திற்கேற்பச் சரிசமமாய்ப் பேச நினைக்கின்றமை நான்காவது பிரச்சினை. பேரழிவு கண்டு சிதைந்து கிடக்கும் நம் தமிழினம் ஒன்றுபட்டு மெல்ல நிமிர்வதற்கு முன், எதிரிகள் நகைக்க, தாம் ஒருவரோடு ஒருவர் மோதி, தியாகிகளின் இரத்தச்சகதியில் தம் சுயநலம் விதைக்க நினைக்கும், நம் தலைவர்களின் போக்கு ஐந்தாவது பிரச்சினை.

இவையெல்லாவற்றையும் ஒன்று சேர்த்துத்தான் தமிழினத்தின் இன்றைய நிலைமை என்றேன். அப்படியானால் பேரினத்திற்குப் பயந்து எங்களைப் பணியச் சொல்கிறீர்களா? சில பிற்புத்திக்காரர்களின் கேள்வி என் காதில் விழுகிறது. அஞ்சவேண்டியவற்றுக்கு அஞ்சாமல் இருப்பது மடமை என்றான் வள்ளுவன். ‘அஞ்சுவது அஞ்சாமை பேதைமை’ நம்மைப் பலப்படுத்திக் கொள்ளாமல், எதிராளிக்குச் சவால் விடுவதைப் போல அறியாமை, வேறேதும் இருக்கமுடியுமா? வளர்ச்சிக்கு வாய்ப்பாகக் கிடைத்த மாகாண சபையையும் உட்பகையால் உடைத்து வைத்திருக்கிறோம். இன்றுவரை தமிழ் நாட்டோடுகூட நம் தலைவர்கள் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளவில்லை. இதுதான் இன்றைய நம் அரசியல் நிலை.

பேரினத்தின் ராஜதந்திரத்திற்கு முன்னால், தம் உயிரைவிடத் துணிந்த போராளிகளாலேயே கடைசியில் ஒன்றும் செய்ய முடியாமற் போயிற்று. சுயநலத்தின் உச்சத்தில் நின்று கூத்தாடும் இன்றைய தலைவர்களா பேரினத்தை எதிர்த்து, நமக்கு உரிமை பெற்றுத் தரப்போகிறார்கள்.

பகற்கனவு காண்பதற்கும் ஓர் எல்லை வேண்டாமா? போர்க்காலத்தில் பாதுகாப்பாக ஆங்காங்கு இருந்துவிட்டு, இன்று தம் நலத்திற்காய்ப் பதவிகள் நோக்கி வாயூறி நிற்கும், இத்தலைவர்கள் நம்மை ஏமாற்ற நினைப்பதில் எந்த ஆச்சரியமுமில்லை. அடிக்கு மேல் அடி வாங்கி ஆயிரம் அழிவுகளைச் சந்தித்த பிறகும், யதார்த்தம் உணராமல் ஏமாற நினைக்கும் நாம்தான் ஆச்சரியத்திற்குரியவர்கள். நிச்சயம் வரலாறு நம்மை பழிக்கப்போகிறது!

கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில், சர்ச்சைக்குரியவரான ஞானசார தேரர், யாழ் நாகவிகாரையின் முன்னாள் விகாராதிபதியின் பூதவுடலை தகனம் செய்வதற்கு, யாழ்ப்பாணத்தில் இடம் வழங்க மறுத்துள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணத்தில் இவ்வாறு நடந்து கொள்ளும் போது, எப்படி நாட்டில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப முடியும்? என்று கேள்வி எழுப்பியுள்ளார். அவர் எப்படிப்பட்டவராயும் இருந்துவிட்டுப் போகட்டும்! அவரது கேள்விக்கு நாம் என்ன பதில் உரைக்கப்போகிறோம்?

நமக்கு இருக்கும் பெரும்பான்மையை வைத்து, வடக்கில் சிறுபான்மையாய் இருக்கும் சிங்களவர்களை நாம் அடக்க நினைத்தால், தேசத்தளவில் பெரும்பான்மையாய் இருக்கும் அவர்கள், சிறுபான்மையினராகிய நம்மை அடக்குவது தவறென்று எங்ஙனம் உலக அரங்கில் நாம் உரைக்கமுடியும்?

உண்மை உணராது எதிராளியின் வெற்றிக்கு வாள் தீட்டிக் கொடுக்கும் நம் தலைவர்களை என்ன என்பது?

முற்றவெளி என்ன மயானமா? சிலர் கேள்வி எழுப்புகின்றனர். கேள்வி பதில்களெல்லாம் ஒருபுறம் கிடக்கட்டும். ஒரு துறவிக்கான இறுதி மரியாதையில் இந்த நியாயங்களையெல்லாம் நாம் பேசத்தான் வேண்டுமா? நல்லூர் வீதியில் முருகன் ஆலயத்திற்கு அருகிலேயே, போரில் இறந்த சிங்கள இராணுவத்தினரின் உடல்களை வரிசையாய் அடுக்கி, கண்காட்சிக்கு வைத்த போதும் அதை வரிசையாய் நின்று மக்கள் பார்த்தபோதும், இந்தக் கேள்விகள் எல்லாம் எழுந்தனவா என்ன?

துறவிக்கான இறுதி மரியாதையில் இந்தக் கேள்விகளுக்கு அவசியமில்லை என்றே கருதுகிறேன். விதிகள் இருந்தால் விதிவிலக்குகளும் இருக்கத்தான் செய்யும். இது விதிவிலக்கு. அவ்வளவே!

நல்லை ஆதீனத்தின் முதற்குருமகாசந்நிதானம் நிறைவு அடைந்த போது, குருமுதல்வரின் உடலை ஆதீனத்திற்குள்ளேயே சமாதி வைக்க ஆயத்தம் செய்தார்கள். சுற்றி வரக் கோயில்கள் இருக்கும் இவ்விடத்தில் அவ் உடலை சமாதி வைக்கலாமா? என்று கேட்டு, அப்போதும் சிலர் பிரச்சினை கிளப்பினார்கள். ஆனால் அப்போதைய தலைவர்களும் சமுதாயப் பெரியவர்களும், அது துறவிக்கான மரியாதை அதில் யாரும் தலையிடக்கூடாது என உரைத்து, நல்லபடி அச்சமாதி நிகழ்வை நிகழ்த்தினார்கள். பௌத்த துறவியின் சமாதி பற்றிய கேள்விக்கும் இதுவே பதிலாம்.

நம் மண்ணில் வாழ்ந்த அத்துறவியின் நல்லடக்கத்தை நாமே பொறுப்பேற்றுச் செய்திருக்கவேண்டும். நம் அத்தனை தலைவர்களும் அந்நிகழ்வில் கலந்து கொண்டிருக்கவேண்டும். தமிழ்மக்கள் அத்தனை பேரும் அத்துறவியின் பூதவுடலுக்கு மரியாதை செய்திருக்கவேண்டும். இவ்வளவும் நடந்திருந்தால் நம் தமிழினத்தின் மரியாதை பேரினத்தார் மத்தியில் எவ்வளவு உயர்ந்திருக்கும்! சிறுபான்மையினருக்கு நாம் செய்த செய்துகொண்டிருக்கின்ற அழிவுகளுக்கு மத்தியில், தமிழினம் நம் மதத் துறவியை எவ்வளவு கண்ணியப்படுத்தி மரியாதை செய்திருக்கிறது?

இவர்கள் அல்லவா மனிதர்கள்! என, பேரினத்தாரை நாணப்பட வைக்கும் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை நாம் இழந்துபோயிருக்கிறோம். இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல் எனும், வள்ளுவனின் கருத்து வாக்குக்குத்தானா? வாழ்க்கைக்கு இல்லையா? நாண வேண்டியவர்கள் நாமாகிப் போனோம்.

மக்களை நெறிசெய்யவேண்டிய தலைவர்களே, ஒரு துறவியின் மரணத்தையும் தம் சுயநலத்திற்காய்ப் பயன்படுத்தியமை, தமிழினம் வெட்கப்படவேண்டிய செயல் என்பதில் ஐயமில்லை. மக்களுக்காய்த் தியாகங்கள் செய்யத் தெம்பில்லாதவர்கள், தேவையில்லாத விடயங்களில் இன உரிமை பேசி, அதை மக்கள் மன்றில் தம் தியாகமாய்ப் பதிவு செய்து, வாக்கு வேட்டைக்கு வாய் பிளந்து அலைகிறார்கள். ஒரு நேர்மைத்தமிழனாய் அவர்தம்மின் தவறைச் சுட்டிக்காட்டி, நல்லவர்கள் சார்பில் அச்செயலைக் கண்டிக்க விரும்புகிறேன். இதுவே நான் சொல்ல நினைந்த முதல் தவறு.

நான், எனது எனும் எண்ணங்களைத் துறந்தோரே துறவிகளாம். என்று துறவு சமயத் தேவைகளுக்காக நிர்வாகமயப்படுத்தப்பட்டதோ, அன்று பிடித்தது துறவுக்குச் சனி! துறவை ஏற்று நிற்கும் எல்லாச்சமயத்தவரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். துறவு உடல் சார்ந்த விடயமல்ல, உளம் சார்ந்த விடயம். இன்னும் சரியாய்ச் சொல்லப்போனால் அது உயிர் சார்ந்த விடயம் என்பதே நிஜமாம். கோடியில் ஒருவருக்குச் சாத்தியமாகும் அவ் இயல்பை ஓர் அமைப்பாக்கி, அமைப்பை விரிவிக்க அங்கத்தினரைச் சேர்ப்பதாய்ச் சொல்லி, துறவுக்கூட்டுக்குள் துறவில்லாதாரை உட்புகுத்தியதன் விளைவே, துறவுக்கான மதிப்பை இன்று இல்லாமல் செய்திருக்கிறது.

நம்நாட்டில்இனத்துவேசமும் அரசியலும், துறவின் பெயரால் விரிவாகப் பரப்பப்பட்டதால் தான், மரியாதை செய்யப்படவேண்டிய துறவு இன்று மதிப்பிழந்து நிற்கிறது. துறவோர் துறவுக்குச் செய்த இழிவின் விளைவையே இங்கு இரண்டாவது தவறென உரைக்கிறேன். அமரரான நாகவிகாராதிபதியின் இறுதிக்கிரியைகளில் ஏற்பட்ட சர்ச்சைக்கு, அரசியலாளர்கள் மட்டுமின்றி துறவின் பெயரால் அரசியல் செய்த அனைவருமே பொறுப்பேற்றாகவேண்டும்.

அன்பு செய்யவேண்டிய துறவின் பெயரால் வன்முறை செய்த அத்தனை பேரதும் தவறே, இன்று துறவுக்கு எதிரான உணர்வைத் தமிழ் மக்கள் மத்தியில் திணித்திருக்கிறது, அல்லது மற்றவர் திணிக்கக் காரணமாய் இருந்திருக்கிறது தீயவை இல்லாத உலகம் என்ற ஒன்று எப்போதும் இருக்கப்போவதில்லை. ஆனால், தீயவர்கள் நல்லவற்றின் பெயரால் தம் தீமைகளை இயற்ற, உலகு ஒருக்காலும் அனுமதிக்கக்கூடாது. அங்ஙனம் அனுமதித்தால் பின்னாளில் நன்மைகளும் தீமைகளோடு சேர்ந்து இழிவுபடுத்தப்படும். நடந்து முடிந்த சம்பவம் இவ்வுண்மைக்குச் சான்றாகியிருக்கிறது. இனியேனும் இத்தவறு நிகழாமல் துறந்தோர் காப்பார்களாக!

மறைந்த விகாராதிபதியின் இறுதிச் சடங்கை, பொலிஸாரும் இராணுவத்தினரும் பொறுப்பேற்று நடத்தியமையே, நிகழ்ந்த மூன்றாவது தவறாம். ஆயிரக்கணக்கான துறவிகள் நிறைந்த இந்நாட்டின் பௌத்த உலகில், ஒரு துறவியின் இறுதிக்கிரியைகள் பற்றி எழுந்த சர்ச்சையை, தமது அகிம்சையால் கையாள ஒரு துறவிதானும் இல்லாமல்போனது வியப்புத் தருகிறது. தம் அகிம்சையை விட இராணுவத்தினரின் ஆயுதத்திற்குப் பலம் அதிகம் என நினைத்த இவர்தம் அறியாமையை என்னென்பது? ஒரு துறவியின் நல்லடக்கம், இராணுவத்தினரின் காவலோடு நடத்தப்பட்டது என்பதை விடவா, ஒரு துறவிக்கு வேறு அவமரியாதை நிகழ்ந்துவிடப்போகிறது? எதற்கெடுத்தாலும் இராணுவத்தினரை அழைக்கும் இயல்பை அரசியலாளர்கள் கையாளட்டும், முற்றும் துறந்த துறவிக்குக் கூடவா இராணுவப் பலம் பாதுகாப்புத் தந்துவிடும்? புத்தர் சொன்ன அன்புப் பலத்தை விட ஆயுதப்பலத்தைப் பெரிதாய் நினைவது,

பௌத்த மதத்தை இழிவு செய்யும் செயலாம். மக்களை ஆயுதத்தால் வென்றுவிட லாம். மனங்களை அன்பால்தான் வெல்ல முடியும். துறவிகளே இம் முன்னுதாரணத்தைக் காட்டத் தவறினால், வேறெவர்தான் அப்பாதையில் பயணிப்பர்?

அனைவருமே புத்தராகலாம் என் றார் புத்தர். புத்தர் என்பது ஒரு நபரைக் குறிப்பதன்று புத்த தத்துவத்தைக் குறிப்பிடுகிறது. அந்த நிலையை அனை வரும் எய்தலாம் என்பதே புத்தரின் அருளுரை. புத்தரை ஆதர் வழிகாட்டியாக ஏற்று அணுகினோர், மூன்றைச் சரணடைந்து அவரை ஏற்றுக்கொண்டனர்.

புத்தம் சரணம் கச்சாமி!
தம்மம் சரணம் கச்சாமி!
சங்கம் சரணம் கச்சாமி! என்பவையே அம்மூன்று கொள்கைகளாம். புத்தரைச் சரணாக அடைதல், தர்மத்தை சரணாக அடைதல், புத்தரின் கொள்கைகளைக் கடைப்பிடிப்போரின் சங்கமத்தைச் சரணாக அடைதல், என்பவையே அம்மூன்று தொடர்களது விளக்கமாம். எத்துணை பெரிய இலட்சியங்கள்!

பௌத்தத்தை வலியப் பரப்புவதை விட, இக் கொள்கைகளைப் பரப்பினால் பௌத்தம் தானாகப் பரவிவிடப்போகிறது. இவ் உண்மையை பேரினத்தார் என்று உணரப் போகிறார்களோ? அன்றுதான் இத்தேசத்துள் ஒளி புகும்.

மூன்று தவறுகள் பற்றிச் சொன்னேன். முதல் தவறு நாம் செய்தது. மற்றைய தவறுகள் அவர்கள் செய்தவை. ஏதிலார் குற்றம் காண்பதைவிட தம் குற்றம் காண்பதே சிறந்தது என்கிறார் வள்ளுவர். நிகழ்ந்தது நிகழ்ந்து விட்டது. தவறுக்காய் மன்னிப்புக்கோருவதில் எந்தத் தவறுமில்லை. அதனால் பௌத்த துறவிக்கு நிகழ்த்தப்பட்ட அவமரியாதைக்காக, இம்மண்ணில் நீண்ட காலம் அறிவுலகத்தோடும் சமய உலகத்தோடும், தொடர்பு கொண்டிருப்பவன் என்ற முறையில், தமிழ்மக்கள் சார்பில் பௌத்த மதத்தாரிடம் பகிரங்கமாய் மன்னிப்புக் கோருகிறேன்.

மற்றவர்கள் கருத்து எப்படியோ?

இதனால் என் மனம் சாந்தி அடைகிறது. ★

# பிணைமுறி குற்றவாளிகளுக்கு தேர்தலுக்கு முன்னர் தண்டனை!

கொழும்பு, ஜன. 02

மத்தியவங்கி பிணைமுறி விவகாரத்தில் விரைவில் தீர்மானம் எடுக்கப் படும். தேர்தலுக்கு முன்னர் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப் படும் என ஜனாதிபதி உறுதியளித் துள்ளார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

மக்களின் நிதியை கொள்ளையடித்த நபர்களுக்கு நாட்டில் எந்த அங்கீகாரமும் வழங்கப்படக் கூடாது, அத்துடன் குற்றவாளிகளுக்கு கடினமான தண்டனை வழங்கவேண்டும் என ஜனாதிபதிக்கு வலியுறுத்துகிறோம் என அக்கட்சி தெரிவித்தது.

சர்ச்சைக்குரிய மத்தியவங்கி பிணைமுறி விவகாரத்தில் ஜனாதிபதியின் மூலமாக நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு தனது அறிக்கையை கடந்த சனிக் கிழமை ஜனாதிபதியிடம் கையளித்தது.

இந்த நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்தகட்டமாக முன்னெடுக்கவுள்ள நகர்வுகள் குறித்து சகல தரப்புகளும் கேள்வி எழுப்பி வருகின்றன.

இந்நிலையில், ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப் பாடு தொடர்பில் கருத்துத் தெரிவித்த கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மேற்கண்ட வாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப் பாட்டில் இருந்தே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயற்பட்டு வருகின்றது.

இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடுகளே விசாரணைகளை முடுக்கிவிட சாதகமாக அமைந்தன. மத்திய வங்கி பிணைமுறி விடயத்தில் கோப் குழுவின் அறிக்கை மூடி மறைக்கப்பட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தனித் தீர்மானத்தின் பிரகாரமே விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் மூலமாகவே மத்தியவங்கி பிணை முறி ஊழல் விவகாரத்தில் விசாரணைகள் பலப்படுத்தப்பட்டன. சந்தேகப்படும் சகல நபர்களும் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

இந்த விசாரணை ஆணைக்குழு எந்தவித அரசியல் தலையீடுகள் இல்லாது, எவரதும் அதிகாரத்திற்கு கட்டுப்படாது, ஊழல், அச்சுறுத்தல் என்ற எதற்கும் அடிபணியாது சுயாதீனமாக தனது அறிக்கையை ஒப் படைத்துள்ளது.

ஆகவே, இவ்வாறு ஓர் ஆணைக்குழு இலங்கையில் செயற்பட்ட வரலாற்றின் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். ஆகவே, இதுவே ஜனாதிபதியின் முடிவு என்னவென்ற நல்லதோர் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. ஊழல் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு மன்னிப்பு இல்லை என்பதை அவரது செயற்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

மேலும், மத்திய வங்கி ஊழல் விவகாரத்தில் மூடி மறைக்க எதனையும் செய்ய முடியாது. இந்த விவகாரம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே ஊடகங்கள் மூலமாக சகல தரவுகளும் மக்களுக்குச் சென்றடைந்துள்ளன.

ஆகவே, மக்கள் மிகவும் தெளிவாக இந்தச் சம்பவங்களை அவதானித்து வருகின்றனர். அவ்வாறு இருக்கையில் குற்றவாளிகளை யாரும் எதற்காகவும் காப்பாற்ற முடியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டங்கள் இடம்பெற்ற சகல சந்தர்ப்பங்களிலும் மத்திய வங்கி விவகாரத்தில் உறுதி யான நிலைப்பாட்டில் இருந்தே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்பட்டு வந்துள்ளார்.

குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்ற உறுதியான கொள்கையில் அவர் உள்ளார். அவ்வாறு இருக்கையில் குற்றவாளிகள் ஒருபோதும் தப்பிக்க முடியாது.

மேலும், எதிர்வரும் உள்ளூ ராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னர் இந்த விவகாரம் முடிவுக்கு வரவேண்டும் என நாங்களும் தெரிவித்து வருகின் றோம். சட்டத்தின் மூலமாக முன்னெடுக்கக் கூடிய சகல முயற்சிகளையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற வகையில் நாம் முன்னெ டுப்போம். குற்றவாளிகளுக்குநிச்சயம் தண்டனை உண்டென்பது உறுதி எனவும் அவர் குறிப்பிட்டார்.

## புத்தாண்டு ஆராதனைக்கு சென்ற வேளையில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன. 02

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட குருசோ வீதியிலுள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை இரண்டரைப் பவுண் நகை உள்ளிட்ட பெறுதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டிலுள்ளவர்கள் புத்தாண்டு ஆராதனைக்காக யாழ்ப்பாணம் மரியன்னை தேவாலயத்திற்குச் சென்ற போது இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் பின் பக்கக் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டுக்குள் சல்லடை போட்டுத்தேடி, இரண்டரைப் பவுண் நகை, பணம் மற்றும் பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளரால் வழங்கப்பட்ட முறைப் பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் இடம்பெறு கின்றன என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித் தனர்.

இதேவேளை, அண்மைக் காலமாக யாழ்ப்பாண குடாநாட்டில் பரவலாக திருட்டு, கொள்ளை சம்பவம் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக, வீதியால் செல்லும் பெண்களின் தங்க நகைகள் அறுக்கப்படுகின்ற மையும் குறிப்பிடத்தக்கது.

## 25 ஆயிரம் வெளிநாட்டவர்களுக்கு இலங்கையில் வேலைவாய்ப்புகள்!

கொழும்பு, ஜன. 02

இலங்கையில் பல்வேறு பணிகளில் 25 ஆயிரம் வெளிநாட்டவர்கள் ஈடுபடு வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அவற்றில் இந்தியா மற்றும் சீனா முதலிடம் பிடித்துள்ளன என குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு ஆணையாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

பல நாடுகளில் உள்ள தொழில் வல்லுநர்கள் பல்வேறு தொழிற்றுறைகளில் பல்வேறு வேலைத்திட்டங்களில் இலங்கையில் வேலை செய்து வருகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலாளர்கள், மூத்த நிர்வாகிகள், இளநிலை நிர்வாகிகள், திறமையான தொழிலாளர்கள் மற்றும் உதவி ஊழியர்கள் ஆகியோருக்கு தங்கள் வேலையின் தேவைகளைப் பொறுத்து நாட்டில் வேலை செய்யும் குடியுரிமை விசாக்கள் அல்லது தொழில் விசாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

பல்வேறு துறைகளில் முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள், துறைமுக நகரங்கள் போன்ற அரசாங்க திட்டங்கள், கொழும்பு நகரத்தில் உள்ள பெரிய வணிக நிறுவனங்கள் மற்றும் வானளாவிய கட்டுமானங்கள் ஆகியவை அடங்கும்.

நாட்டின் வெளிநாட்டு அபிவிருத்தி நட வ டிக்கைகளை கருத்தில் கொண்டு இந்த வெளிநாட்டு நிபுணர்களுக்கான குடிவரவு மற்றும் குடிய கல்வுத் திணைக்களம் விசாவுக்கு அனுமதி வழங்கியுள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள பலர் ஐரோப்பிய நாடுகளில் வேலை வாய்ப்புக்காக அங்கு செல்ல முயன்று வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கையில் பணியாற்ற வெளிநாட்டவர்கள் விரும்பம் வெளியிட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெகுசிறப்பாக இடம்பெற்றது பாரதி விழாவும் கவியரங்கமும்!









கொழும்பு, ஜன. 02

கொழும்பு - விவேகானந்தா கல்லூரியில் பாரதிவிழாவும், கவியரங்கமும் வெகுசிறப்பாக இடம்பெற்றன.

இந்த நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் பாரதிகலா மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன்போது, சோதிமிக்க நவ கவிதை என்னும் கவியரங்க நிகழ்வு இடம்பெற்றதுடன், சட்டத்துறை விரிவுரையாளரான யசோதா கதிர்காமத்தம்பி சொற்பொழிவை ஆற்றியுள் ளார்.

மேலும், இந்து கலாசார முன்னாள் இராஜாங்க அமைச்சர் பி.பி.தேவராஜ் தலைமையில் நடத்தப்பட்ட நிகழ்வில் சிறப்பு விருந்தினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(க)

# அறிந்து கொள்வதற்கு...

**Numbers**

| | |
|---|---|
| One | ஒன்று |
| Two | இரண்டு |
| Three | மூன்று |
| Four | நான்கு |
| Five | ஐந்து |
| Six | ஆறு |
| Seven | ஏழு |
| Eight | எட்டு |
| Nine | ஒன்பது |
| Ten | பத்து |
| Eleven- | பதினொன்று |
| Twelve | பன்னிரண்டு |
| Thirteen | பதின்மூன்று |
| Fourteen | பதின்நான்கு |
| Fifteen | பதினைந்து |
| Sixteen | பதினாறு |
| Seventeen | பதினேழு |
| Eighteen | பதினெட்டு |
| Nineteen | பத்தொன்பது |
| Twenty | இருபது |
| Thirty | முப்பது |
| Forty | நாற்பது |
| Fifty | ஐம்பது |
| Sixty | அறுபது |
| Seventy | எழுபது |
| Eighty | எண்பது |
| Ninety | தொண்ணூறு |
| Hundred | நூறு |
| Thousand | ஆயிரம் |

**Part of the Body**

| | |
|---|---|
| Head | தலை |
| Hand | கை |
| Nose | மூக்கு |
| Knee | முழங்கால் |
| Lip | உதடு |
| Nail | நகம் |
| Neck | கழுத்து |
| Hair | முடி |
| Finger | கைவிரல் |
| Mouth | வாய் |
| Shoulder | தோள் |
| Eye | கண் |
| Stomach | வயிறு |
| Tooth | பல் |
| Toe | கால்விரல் |
| Ear | காது |
| Elbow | முழங்கை |
| Leg | கால் |
| Tongue | நாக்கு |
| Foot | பாதம் |
| Palm | உள்ளங்கை |
| Skin | தோல் |
| Arm | புயம் |
| Face | முகம் |
| Brain | மூளை |
| Hip | இடுப்பு |

**Toys**

| | |
|---|---|
| Ball | பந்து |
| Bat | துடுப்பு |
| Doll | பொம்மை |
| Building block | கட்டிடப்பகுதி |
| Balloon | பலூன் |
| Kite | பட்டம் |
| Whistle | ஊதுகுழல் |
| Water Pistol | நீர்த்துப்பாக்கி |
| Toy cart | விளையாட்டுவண்டி |
| Teddy Bear | கரடிப்பொம்மை |
| Toy Train | விளையாட்டு புகையிரதம் |

**Clothes**

| | |
|---|---|
| Frock | சட்டை |
| Blouse | மேற்சட்டை |
| Skirt | பாவாடை |
| Shorts | அரைகாற்சட்டை |
| Shirt | சேட் |
| Trouser | நீளக்காற்சட்டை |
| Tie | கழுத்துப்பட்டி |
| Hat | தொப்பி |
| Gloves | கையுறை |
| Socks | காலுறை |
| Shoe | சப்பாத்து |
| Sari | சேலை |
| T-Shirt | ரீ – சேட் |
| Sarong | சாரம் |

**Food and Drinks**

| | |
|---|---|
| Bread | பாண் |
| Meat | இறைச்சி |
| Fish | மீன் |
| String hopper | இடியப்பம் |
| Sweets | இனிப்புக்கள் |
| Bun | சீனிப்பாண் |
| Cake | கேக் |
| Hopper | அப்பம் |
| Noodles | நூடில்ஸ் |
| Rice | சோறு |
| Milk rice | பாற்சோறு |
| Ice Cream | குளிர்களி |
| Milk | பால் |
| Water | நீர் |
| Tea | தேநீர் |
| Coffee | கோப்பி |
| Orange Juice | தோடம்பழச்சாறு |
| Egg | முட்டை |
| Curry | கறி |
| Sandwich | பாண்படை |
| Biscuit | பிஸ்கட் |
| Toffee | ரொபி |
| Chocolate | சொக்லேட் |
| Butter | வெண்ணெய் |
| Cheese | பாற்கட்டி |
| Dhal | பருப்பு |
| Hopper s | அப்பம் |
| Curd | தயிர் |
| Pickle | ஊறுகாய் |
| Flour | மா |
| Wheat | கோதுமை |
| Sprat | நெத்தலி |

**Vegetable**


| | |
|---|---|
| Cabbage | கோவா |
| Potato | உருளைக்கிழங்கு |
| Brinjal | கத்திரிக்காய் |
| Pumpkin | பூசணி |
| Snake - gourd | புடோல் |
| Bitter gourd | பாகற்காய் |
| Carrot | கரட் |
| Bottle gourd | சுரக்காய் |
| Beans | அவரை |
| Long beans | பயிற்றை |
| Lady's finger | வெண்டி |
| Cucumber | வெள்ளரிக்காய் |
| Radish | முள்ளங்கி |
| Sweet potato | வற்றாளைக்கிழங்கு |
| Bread Fruit | ஈரப்பலா |
| Plantain | வாழைக்காய் |
| Spinach | கீரை |
| Beet root | பீற்றூட் |
| Tomato | தக்காளி |
| Mushroom | காளான் |

**Washing Thinks**

| | |
|---|---|
| Soap | சவர்க்காரம் |
| Clothesline | உடுப்புக்கொடி |
| Iron box | மின்அழுத்தி |
| Bucket | வாளி |
| Washing powder | சவர்க்காரத்தூள் |
| Water | தண்ணீர் |
| Well | கிணறு |
| Tap | நீர்க்குழாய் |






15. 

ஒரே அளவான சம பரப்பளவு உடைய மூன்று முக்கோணிகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டுள்ளன. இதில் நிறம் தீட்டப்பட்ட பகுதி 5 சதுர சென்ரிமீற்றர் எனின் முழு உருவின் மொத்த பரப்பளவு பற்றி சரியான கூற்று

1) 30 சதுர சென்ரிமீற்றர் 2) 30 சதுர சென்ரிமீற்றருக்கு கூடியது 3) 30 சதுர சென்ரிமீற்றருக்கு குறைவானது

16. 

அருகில் காட்டப்பட்டுள்ள செவ்வக வடிவ கேக் காணப்படுகின்றது. இதனை கோடுகளின் வழியே வெட்டி 15 துண்டுகள் பெற வேண்டும் எனின் ஆகக் குறைந்தது எத்தனை தடவை வெட்ட வேண்டும்?


1) 10 தடவை 2) 6 தடவை 3) 14 தடவை

17. வடக்கே நோக்கிச் செல்லும் திவ்வியனுக்கு அவனது வலக்கைப் பக்கம் நிழல் விழுகின்றது எனின் அவன் சென்ற நேரம் எதுவாக இருக்கலாம்?

1) காலை 2) மாலை 3) கூற முடியாது


18. கடிகாரம் ஒன்றின் நிமிட முள் வட கிழக்காக நின்று அதில் இருந்து 30 நிமிடம் கழிந்த பின் நிமிட முள் காட்டும் திசை யாது?

1) வட மேற்கு 2) தென் கிழக்கு 3) தென் மேற்கு


19. 


ஆகிய இரண்டு அட்டைகளினையும் ஒன்றோடு ஒன்று வைக்கப்பட்டால் கிடைக்கும் வடிவம் யாது?


1) AXW 2) FAN 3) CAM

20. 


இவ் இரு சதுரமுகி விரிக்கும்போது கிடைக்கும் சரியான உருவாக இருக்கக்கூடியது

1) 


2) 


3) 


❖ A, B, C, D, E ஆகிய ஐந்து எழுத்துக்களை மட்டும் கொண்டு நெய்யரி ஒன்று உருவாக்கப்பட்டது. இதில் ஒரு திசையிலோ நிரலிலோ ஒரு எழுத்து மீண்டும் வராது.

| | | | | |
|---|---|---|---|---|
| A | B | C | D | E |
| B | D | E | C | A |
| C | ■ | A | B | D |
| D | A | B | E | C |
| E | C | D | ● | B |

21. ■ என்ற இடத்தில் வரக்கூடிய எழுத்து

1) A 2) E 3) D

22. ● என்ற இடத்தில் வரக்கூடிய எழுத்து

1) C 2) D 3) A


05

23.

| | | | |
|---|---|---|---|
| 1 | 5 | 6 | 3 |
| 4 | ? | 1 | 2 |
| 9 | 1 | 2 | 3 |
| 1 | 1 | 6 | 7 |

இங்கு ? என்ற இடத்தில் வரக்கூடிய எண்
1) 8 2) 9 3) 7

24.




1) 25 2) 37 3) 29


25.
2 → 6
3 → 12
4 → 20
5 → 30
6 → ?

1) 42 2) 36 3) 46

26. ஒற்றைக்கம்பில் மீன் பிடிக்கும் மீனவனின் படம் பொறித்த தாள் காசு
1) பத்து ரூபா 2) இருபது ரூபா 3) ஐம்பது ரூபா


27. தர்சிகனிடம் ரூ. 50 இருந்தது அதில் குற்றிகள் 3உம், தாள் காசு 2ம் உள்ளன எனில் சரியான வடிவம்
1) பத்து ரூபா தாள் காசு 2உம், பத்து ரூபாய் குற்றிகள் 2உம்
2) ஐந்து ரூபா குற்றிகள் 3உம், இருபது ரூபா தாள் காசு 2உம்
3) ஐந்து ரூபா குற்றி 2உம், பத்து ரூபா குத்தி 1உம், பத்து ரூபா தாள் காசு 3ம்

28.



இவ் உருவில் உள்ள முக்கோணிகள் எத்தனை?
1) 3 2) 4 3) 5


29.



இவ் உருவில் நிறம் தீட்டப்பட்ட பகுதியாக அமையாதது
1) $\frac{3}{20}$ 2) $\frac{7}{10}$ 3) $\frac{14}{20}$

30. நிறம் தீட்டப்பட்ட பகுதியின் தசம பாகம்
1) 0.3 2) 0.7 3) 0.6

31.




இவ் உருவினைப் போன்று சம அளவிலான இரண்டு உருக்களை ஒன்றோடு ஒன்று ஒரு நான்கு பக்க உரு அமைக்கப்பட்டால் அதன் சுற்றளவு யாது?
1) 16 cm 2) 10 cm 3) 12 cm


03

32. ஒரு தேங்காய் ரூ. 25.00 எனின் ரூ. 200க்கு எத்தனை தேங்காய் வாங்க முடியும்?
1) 4 2) 6 3) 8

33. செப்புக்கம்பி ஒன்றை இரண்டாக மடித்து மீண்டும் இரண்டாக மடித்து வெட்டி எடுத்தபோது ஒரு துண்டின் நீளம் 5cm ஆக இருந்தது எனின் முன்பு செப்புக் கம்பியின் நீளம் யாது?
1) 40 cm 2) 10 cm 3) 20 cm

34. அடுத்த லீப் வருடம் 2020 எனின் அது எத்தனையாம் நூற்றாண்டு
1) 203 2) 20 3) 21

35. 2016ம் ஆண்டு நாம் வாழ்ந்து கொண்டு இருக்கும் காலம் ஆகும். இது இந்த நூற்றாண்டின் எத்தனையாவது தசாப்தம் ஆகும்.
1) 1வது 2) 2வது 3) 3வது




36. ஆலயத்திற்கு வடக்கே அமைந்துள்ளது
1) நூலகம் 2) மரம் 3) வீதி

37. நூலகத்திற்கு மேற்கே இல்லாதது
1) மரம் 2) தோட்டம் 3) வீடு

38. வீட்டுக்கு வட மேற்கே அமைந்துள்ளது
1) தோட்டம் 2) நூலகம் 3) மைதானம்

| நிகழ்வு | ஆரம்பித்தது | முடிந்தது |
|---|---|---|
| நடனம் | மு.ப 9.30 | மு.ப 10.20 |
| பாடல் | மு.ப 10.25 | மு.ப 11.00 |
| நாடகம் | மு.ப 11.35 | பி.ப 2.40 |

39. நாடகம் முடிவடைந்ததன் நியம நேரத்தை தருக.
1) பி.ப 02:40 மணித்தியாலம் 2) பி.ப 14:40 மணித்தியாலம் 3) 14:40 மணித்தியாலம்

40 நடனம் தொடங்கி முடிய எடுத்த காலம்
1) 40 நிமிடம் 2) 50 நிமிடம் 3) 1 மணி 10 நிமிடம்

(2 ½ x40 = 100 புள்ளி)

## ஊழல் வழக்கில் இருந்து தப்பிக்க ராணுவத்துடன் செரீப் ரகசிய பேச்சு!



லாகூர்,ஜன.02

ஊழல் வழக்குகளில் இருந்து தப்பிக்க பாகிஸ்தானின் மிகப்பெரிய அதிகார மையமான இராணுவத்துடன் இரகசியப் பேச்சு நடத்திச் சமரச நடவடிக்கை மேற்கொள்ள நவாஸ்செரீப் முடிவு செய்துள்ளார் என்று கூறப்படுகிறது.

பனாமா ஊழல் வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ்செரீப் பதவி இழந்தார் . அவரது மகன்கள், மகள் மற்றும் மருமகன் மீதும் 3 ஊழல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சித்தலைவர் பதவியையும் நவாஸ் செரீப் ராஜினாமாச் செய்துள்ளார்.

ஊழல் வழக்குகளில் தண்டனை வழங்கி விட்டால் குடும்பத்தினர் அனைவரும் சிறைக்குச் செல்ல நேரிடும். இதனால் நவாஸ்செரீப் குடும்பத்தினரின் அரசியல் ஆட்டம் கண்டுள்ளது.

எனவே, பாகிஸ்தானின் மிகப்பெரிய அதிகார மையமான இராணுவத்துடன் ரகசியப் பேச்சு நடத்திச் சமரச நடவடிக்கை மேற்கொள்ள நவாஸ்செரீப் முடிவு செய்துள்ளாராம்.

## முதன்முதலாகப் புத்தாண்டை கொண்டாடிய நியூஸிலாந்து



வெலிங்டன்,ஜன.02

உலகில் முதன்முதலாக நியூசிலாந்து நாட்டு மக்கள் நேற்று ஆட்டம், பாட்டம், வாண வேடிக்கை என கோலாகலமாக புத்தாண்டை வரவேற்று மகிழ்ந்தனர்.

பூமிப் பந்தின் கிழக்குத் திசையின் கடைக் கோடியில் ஆஸ்திரேலியா, ஓசியானியா கண்டத்தில் பசிபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள நியூஸிலாந்து நாடு உலகில் முதன்முதலாக சூரிய உதயத்தை சந்திக்கும் முதல் நாடாக உள்ளது. இலங்கைக்கும் நியூஸிலாந்துக்கும் இடையில் உள்ள நேர வித்தியாசம் ஏழரை மணிநேரம் ஆகும்.

இந்த நிலையில், (இலங்கை நேரப்படி நேற்று மாலை 4.30 மணியளவில்) நியூஸிலாந்தில் நள்ளிரவு 12 மணி ஆனவுடன் அந்நாட்டு மக்கள் ஆட்டம், பாட்டம், வாணவேடிக்கை என கோலாகலமாக புத்தாண்டை வரவேற்று மகிழ்ந்தனர். கண்ணை கவரும் வகையில் நடைபெற்ற வாணவேடிக்கை நிகழ்ச்சிகள் காண்போரை பரவசத்தில் ஆழ்த்தியது.

நியூஸிலாந்துக்கு அடுத்தபடியாக ஜப்பான் நாட்டு மக்கள் உலகிலேயே இரண்டாவதாகப் புத்தாண்டைக் கொண்டாடி மகிழ்ந்தார்கள். அதன் பின்னர் சுமார் மூன்றரை மணி நேரத்துக்கு பிறகு நமது நாட்டில் புத்தாண்டு பிறந்தது.



## பயணிகள் விமானம் வீழ்ந்து நொறுங்கி பத்து வெளிநாட்டவருடன் 12 பேர் சாவு!

சன்ஜோஸ்,ஜன.02

கோஸ்டா ரிகா நாட்டில் தனியார் பயணிகள் விமானம் நொறுங்கி விழுந்த விபத்தில் 10 வெளிநாட்டவர்கள் பலியாகியுள்ளனர் என அந்நாட்டுப் பாதுகாப்புத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மத்திய அமெரிக்காவில் அமைந்துள்ளது கோஸ்டாரிகா நாடு. பசிபிக் கடல் பகுதியில் அமைந்துள்ள புண்டா இஸ்லிடா நகரில் தனியார் பயணிகள் விமானம் ஒன்று பறந்து சென்று கொண்டிருந்தது. அந்த விமானத்தில் 10 வெளிநாட்டவர்களும், ஊழியர்கள் 2 பேர் என மொத்தம் 12 பேர் பயணம் செய்துள்ளனர்.



சிறிது நேரத்தில் மேலே பறந்து கொண்டிருந்த விமானம் திடீரென விமானியின் கட்டுப்பாட்டை இழந்து கீழே விழுந்து நொறுங்கியது. இதில் விமானத்தில் பயணித்த 12 பேரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர். இது தொடர்பான விசாரணை நடந்து வருகிறது என அந்நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## புத்தாண்டுக் கொண்டாட்டம்; ஸ்தம்பித்தது வட்ஸ் அப்



புத்தாண்டு கொண்டாட்டங்களால் சமூகவலைத் தளமான வட்ஸ் அப் சேவை சுமார் அரை மணி நேரம் பாதிப்பு அடைந்தது.

பேஸ்புக் நிறுவனத்திற்குச் சொந்தமானது வட்ஸ் அப் செயலி. பேஸ்புக்கைத் தொடர்ந்து உலகம் முழுவதிலும் எளிதில் தொடர்பு கொள்ளும் சமூக வலைத்தளமாக விளங்கி வருகிறது.

இதற்கிடையே, புத்தாண்டை வரவேற்கும் விதமாக மக்கள் முக்கிய இடங்களில் ஒன்றுகூடினர். அங்கு வாண வேடிக்கையுடன் புத்தாண்டை வரவேற்றனர். இதுதொடர்பான செய்திகள், புகைப் படங்கள், வீடியோக்களை வட்ஸ் அப்பில் தங்களின் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு அனுப்பி மகிழ்ந்தனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவில் புத்தாண்டு பிறந்ததை முன்னிட்டு, வட்ஸ் அப் சேவை நாடு முழுவதும் பல்வேறு நகரங்களில் சுமார் அரை மணி நேரம் முடங்கியது. அரை மணி நேரத்துக்குப் பிறகு நிலைமை ஓரளவு சீரடைந்தது.

ஏற்கனவே, கடந்த நவம்பர் மாதம் உலகம் முழுவதும் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக வட்ஸ் அப் சேவை செயற்படாமல் முடங்கியமை குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேசியாவில் புத்தாண்டுக் கொண்டாட்டம்: 450 ஜோடிகள் திருமணம் செய்து அசத்தினர்

ஜகார்த்தா,ஜன.02

புத்தாண்டைக் கொண்டாடும் விதமாக, இந்தோனேசியா நாட்டில் 450இற்கும் மேற்பட்ட ஜோடியினர் நேற்றுமுன்தினம் ஒரே நாளில் திருமணம் செய்து கொண்டனர்.

ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் எனப் புத்தாண்டு கொண்டாட்டங்கள் உலகம் முழுவதும் களை கட்டின. பொதுமக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் புத்தாண்டு வாழ்த்துக்களைச் சொல்லி தங்களது மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டனர்.

இந்தநிலையில், இந்தோனேசியா நாட்டின் தலைநகர் ஜகார்த்தாவில் நேற்றுமுன்தினம் நள்ளிரவில் 450இற்கும் மேற்பட்டோர் பங்கேற்ற



மிகப்பெரிய திருமண நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட ஜோடியினருக்கு ஒரே நேரத்தில் திருமணம் செய்து வைக்கப்பட்டு, அதற்கான சான்றிதழ்கள் அரச அதிகாரிகளால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு திருமணம் செய்தவர்கள் கூறுகையில், எங்கள் திருமணத்தை எளிதில் மறக்க முடியாத விதமாக நடத்த முடிவு செய்தோம். அதற்காகவே அரசு ஏற்பாடு செய்த இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று திருமணம் செய்து கொண்டோம் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.



# அ.தி.மு.காவின் வாக்கு வங்கியில் இருந்து ஒரு வாக்கைக் கூட ரஜனி பெற முடியாது



அமைச்சர் ஜெயக்குமார் பேட்டி

அ.தி.மு.க. வாக்கு வங்கியில் இருந்து ஒரு வாக்கைக் கூட ரஜனி உட்பட யாரும் பெற முடியாது என அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

தமிழக அமைச்சர் ஜெயக்குமார், சென்னை விமான நிலையத்தில் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

இந்தியா ஜனநாயக நாடு. வலிமையான ஜனநாயக நாட்டில் யார் வேண்டுமானாலும் அரசியல் கட்சியை ஆரம்பிக்கலாம். இதில் மாறுபட்ட கருத்துக் கிடையாது. கட்சிக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கத் தீர்மானிப்பது மக்கள்தான். அவர்கள்தான் சிறந்த நீதிபதிகள். இறுதி எஜமானார்கள். ஓர் அரசின் வெற்றி, தோல்வியை அவர்கள் தான் தீர்மானிப்பார்கள்.

கட்சி தொடங்கப் போகிறேன் என அறிவித்த ரஜனிக்கு, தமிழர் பண்பாட்டின் அடிப்படையில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ரஜனியின் பேச்சைத் திசை திருப்ப வேண்டாம். ரஜனி, அ.தி.மு.க. என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. பொதுவாகச் சொன்ன கருத்து. அவர் தி.மு.க.வைக் கூடச் சொல்லி இருக்கலாம். அ.தி.மு.காவை சொல்லி இருந்தால் நாங்கள் பதில் தருவோம். பொதுவாகச் சொன்ன கருத்துக்கு நாங்கள் ஏன் பயப்பட வேண்டும்.

ரஜனி வருகையால் அ.தி.மு.க.வுக்கு ஒரு பாதிப்பும் கிடையாது. அ.தி.மு.க.வின் வாக்கு வங்கியில் இருந்து ஒரு வாக்கை கூட ரஜனி உட்பட யாரும் பெற முடியாது. அரசியலில் குதிக்கப்போகிறேன் எனச் தான் சொல்லி இருக்கிறார். அரசியல் என்பது ஒரு கடல். அதில் யார் வந்தாலும் வரவேற்போம்.

அரசியலில் குதித்த பின் என்ன மாதிரிக் கொள்கைகள், திட்டங்கள் என்பதைப் பார்த்துத் தான் விமர்சனம் செய்யமுடியும். பாரதியஜனதாக் கட்சியுடன்கூட்டணியா? என்பதை ரஜனிதான்முடிவுசெய்யவேண்டும்.

2021ஆம் ஆண்டு வரை அ.தி.மு.க. அரசு நீடிக்கும். அதன் பின்பும் அ.தி.மு.க. அரசை அமைப்போம் என்ற பயணத்தில் நாங்கள் செல்கிறோம். ஜெயலலிதாவை ஏமாற்றி கொள்ளையடித்த பணத்தில் தினகரன் வெற்றி பெற்றுள்ளார். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர்களின் விமர்சனங்களுக்கு பதில்கூறப் போவதில்லை – தினகரன்



புத்தாண்டில் எடுத்திருக்கிற முடிவு என்னவென்றால் அமைச்சர்களின் விமர்சனங்களுக்குப் பதில் சொல்லப் போவதில்லை எனத் தினகரன் கூறினார்.

சென்னையில் நேற்று முன் தினம் . தினகரன்நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

அ.தி.மு.கவில் உள்ள நல்லவர்கள் எங்களை நோக்கி வர இருக்கிறார்கள். அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு இருக்கிறார்கள்.

அதனால்தான் ஊட்டி பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர், அமைச்சர்கள் பலர் பேசும்போது, ஓர் அளவைத் தாண்டித் தாக்கிப் பேசுகிறார்கள் என்றால் பயம்தான் காரணம்.

ஏனென்றால் தேர்தலில் அசந்து இருந்த நேரத்தில் நாங்கள் வெற்றி பெற்றோம் என எங்களைப் பார்த்துக் கூறுகிறார்கள். அப்படியானால் நீங்கள் எங்கே போயிருந்தீர்கள். தியானம் பண்ணவா போனீர்கள்?

ஓ.பி.எஸ். பேசும்போது கட்சியில் அவர் மூத்தவர் என்கிறார். இவர்கள் எதை வேண்டுமானாலும் பேசுவார்கள். அதற்கெல்லாம் இனிமேல் நான் பதில் சொல்லப் போவதில்லை.

புத்தாண்டில் நான் எடுத்திருக்கிற முடிவு என்னவென்றால் இவர்களுக்கு நான் பதில் சொல்லப் போவதில்லை.

எடப்பாடி பழனிச்சாமி நினைக்கின்றமை எதுவும் நடக்காது. பகல்கனவு எடப்பாடிஅணியினர்தான்பகல் கனவு காண்கின்றனர். என்று தெரிவித்துள்ளார்.

## ரஜனி மூன்று சவால்களை எதிர்கொள்ள வேண்டும் - கவிஞர் வைரமுத்து

அரசியலில் காலடியெடுத்து வைத்திருக்கும் ரஜனி மூன்று சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என கவிஞர் வைரமுத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கவிஞர் வைரமுத்து சென்னையில் உள்ள அவரது வீட்டில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு–

ரஜனி அரசியல் அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றமை தொடர்ணுபாக அவரின் நண்பர்களில் ஒருவன் என்ற முறையில் வரவேற்கிறேன். இந்த அறிவிப் புக்குப் பின்னர் ஊடகங் களில் ரஜனிக்கு வாழ்த்துகளும், வசைமொழிகளும் குவிந்து வருகின்றமையைக் கண்டேன். வாழ்த்து வதற்கும், வசைபாடு வதற்கும் போதுமான கால அவ காசத்தை ரஜனிக்குக் கொடுக்கவில்லை என்பது என் எண்ணம். வாழ்த்துகிறவர்களெல்லாம், அவரை நாளை வசை பாடலாம்.

அரசியலில்காலடியெடுத்துவைத்திருக்கும் ரஜனியின் முன்பாக மூன்றுபிரச்சினைகள் முன்னிற்கின்றமை எனநான் கருதுகிறேன். முதலில் தனது எதிரி அல்லது எந்த கருத்தியலைஎதிர்த்து அரசியல் செய்யவேண்டும் என்று அவர் முடிவு செய்ய வேண் டும். நண்பன் யார் என்பதைப் பின்னர் கூட முடிவு செய்து கொள்ள லாம். ஆனால், எதிரியை முதலா வதாக முடிவு செய்ய வேண்டும். இரண்டாவதாக மற்ற அரசியல் தலைவர்கள் யாரும் சாதிக்க முடியாததை, நான் எப்படி சாதித்துக் காட்டுவேன் என்பதற்கான கொள்கைவிளக்கம். அந்தக் கொள்கை விளக்கத்தைத் திட்ட வட்டமாகத் தெளிவாகத் தீர்மானித்து , தமிழக மக்களுக்கு அவர் அறிவிக்க வேண்டும்.

சொல்லப்போனால், தலைவன் மற்றும் கலைஞன் ஆகிய இரண்டுக்குமான இடைவெளியை இந்த கொள்கைதான் இட்டு நிரப்பும் என்று நான் நம்புகிறேன்.

மூன்றாவது, கொள்கை என்று ஒன்று அறிவிக்கப்பட்டால், அதைக் கொண்டுசெலுத்துவதற்கு, அதை அடைவதற்கு சிறந்த சிந்தனையாளர்களும், சிறந்த செயல் வீரர்களும் ஓர் இயக்கத்துக்கு, ஒரு தலைவருக்குத் தேவை. இந்த மூன்றும் ரஜனி எதிர்கொள்ள வேண்டிய மிகப்பெரிய சவால்கள் என்று தெரிவித்துள்ளார். (ப)

## ரஜனியுடன் பா.ஜ.க. கூட்டு வைத்தால் தமிழ்நாட்டை விட்டு வெளியேறுவேன்



சுப்ரமணியன் சாமி

ரஜனியின் அரசியல் பிரவேசம் தொடர்பாக பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்ரமணியன் சுவாமி கடு மையாக விமர்சனம் செய் துள்ளார்.

நடிகர் ரஜனிகாந்த் விரைவில் தனிக்கட்சி தொடங்க உள்ளார் எனவும் தமிழகத்தின் 234 தொகுதிகளிலும்போட்டியிட உள்ளேன் எனவும் அறிவித்துள்ளார்.

இதற்குப் பல தலைவர்களும் தங்களின் எதிர்ப்பு மற்றும் ஆதரவைப் பதிவு செய்து வரும் நிலையில் தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் ரஜனி அரசியலுக்கு வந்து பா.ஜ.காவுடன் கூட்டணிவைக்கவேண்டும் எனக் கூறியிருந்தார்.

இந்த நிலையில் இது தொடர்பாகப் பேசியுள்ள பா.ஜ.க. மூத்த தலைவரும் ராஜ்யசபா எம். பியுமான சுப்ரமணியன் சுவாமி, நடிகர் ரஜனிகாந்தைக் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

அதில், ரஜனி அரசியலுக்கு வருகிறேன் என அறிவித்திருக்கிறார். ஆனால் அவரிடம் எந்த கொள்கைகளோ, கோட்பாடுகளோ இல்லை. ரஜனி படிப்பறிவு இல்லாதவர். அவரை ஊடகங்கள் தான் பெரிதாகக் காட்டுகின்றன. தமிழக மக்கள் புத்திசாலிகள்.

அவர் அரசியலுக்கு வந்தாலும் வராவிட்டாலும் ஒன்றும் மாறாது. ரஜனி கட்சி தொடங்கினால் அவரை அம்பலப் படுத்துவேன். என் எதிர்ப்பையும் மீறி ரஜனியுடன் பா.ஜ.க. கூட்டணி வைத்தால் நான் வேறு மாநிலத்துக்குச் சென்று விடுவேன் எனக் கூறியுள்ளார்.

அவரின் இந்தச் சர்ச்சைப் பேச்சு கட்சிக்குள்ளும், வெளியேவும் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. (ப)

## தாஜ்மஹாலில் ஷாஜகான் – மும்தாஜ் கல்லறைக்குச் செல்ல திடீர் தடை விதிப்பு



ஆக்ரா,ஜன.02

தாஜ்மஹாலில் ஷாஜகான் - மும்தாஜ் கல்லறைக்குச் செல்லப் பார்வையாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. இது தற்காலிக பரீட்சார்த்த நடவடிக்கை என தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.


உலக அதிசயங்களில் ஒன்றாக தாஜ்மஹால் உத்தரப்பிரதேச மாநில ஆக்ராவில் யமுனை நதிக்கரையில் உள்ளது. விடுமுறை நாள்களில் அங்குவரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் தாஜ் மஹாலைப் பார்க்க ஏராளமான சுற்றுலாப் பயணிகள் குவிந்து விட்டனர். உள்ளே நுழைவதற்கான நேரம் முடிவடையும் தறுவாயில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குவிந்தனர். இதனால் கிழக்கு நுழைவு வாயில் பகுதியில் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. அதில் சிக்கி 5 பேர் காயம் அடைந்தனர்.

எனவே கூட்டத்தைக் கட்டுப்படுத்த மாற்று நடவடிக்கை எடுக்கத் தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனத்திடம் மத்திய தொழில் பாதுகாப்புப் படை கேட்டுக்கொண்டது.

அதைத் தொடர்ந்து தாஜ்மஹாலில் உள்ளே இருக்கும் ஷாஜகான் மற்றும் மும்தாஜ் கல்லறைக்குச் செல்ல பார்வையாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. இது தற்காலிக பரீட்சார்த்த நடவடிக்கை எனத் தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ப)

# கண்காட்சிப் போட்டியில் செரீனா அதிர்ச்சித் தோல்வி



கண்காட்சிடென்னிஸ்போட்டியில் செரீனா வில்லியம்ஸ் தோல்வியடைந்தமையை அடுத்து ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸில் விளையாடுவது சந்தேகம் என்று தகவல் வெளியாகியுள்ளது.

முன்னாள் டென்னிஸ் வீராங்கனை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நடந்த ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்றார் அதன்போது, 2 மாதக் கர்ப்பிணியாக அவர் இருந்தார். அதன் பிறகு எந்த போட்டியிலும் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி இருந்த செரீனாவுக்கு கடந்த செப்ரெம்பர் மாதம் பெண் குழந்தை பிறந்தது.

மறுபடியும் டென்னிஸ் களம் திரும்புவதற்காக கடந்த ஒரு மாதமாக பயிற்சியில் ஈடுபட்டார். இந்த ஆண்டுக்கான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டிக்கு திரும்புவதற்கு முன்னோட்டமாக அபுதாபியில் நேற்றுமுன்தினம் நடந்த கண்காட்சி டென்னிஸ் போட்டியில் களம் இறங்கிய செரீனா வில்லியம்ஸ், அதில் பிரெஞ்ச் ஓபன் சம்பியனானஆஸ்டாபென்கோவை (லாத்வியா) எதிர்கொண் டார். 67 நிமிடங்கள் நடந்த இந்த மோதலில் ஆஸ்டாபென்கோ 6:2, 3:6, 10:5 என்ற செட் கணக்கில் செரீனாவுக்கு அதிர்ச்சி அளித்தார். சூப்பர் டைபிரேக்கரில் மிகவும் தடு மாறிய செரீனா ஆக்ரோசமாக செயற்பட முயற்சித்து பந்தை பலமுறை வெளியே அடித்துத்தவறிழைத்தார்.

தோல்விக்கு பிறகு 36 வயதான செரீனா வில்லியம்ஸ் கூறுகையில், டென்னிஸ் விளையாடுவது, சவால் அளிப்பது, ரசிகர்களின் ஆரவாரம் என்று எல்லாவற்றையும் சிறிது காலம் தவறவிட்டு விட்டேன். மறுபடியும் டென்னிஸ் களம் திரும்பியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இப்போது நான் ஒரு குழந்தையின் தாய். களத்தில் இருக்கும் போது குழந்தையின் நினைவைத் தவிர்க்க முடியவில்லை. அடிக்கடி குழந்தை இருக்கும் பகுதியைப் பார்த்துக் கொண்டேன் என்று தெரிவித்துள்ளார். (ப)

# கோஹ்லி எதையும் சாதிப்பார்


கலீஸ்

வெற்றி வேட்கையுடன் இருந்தால் இந்திய அணி கப்டன் விராட் கோஹ்லி எதையும் சாதிப்பார் என்று தென்னாபிரிக்க வீரர் கலீஸ் கூறியுள்ளார்.

இந்தியா – தென்ஆபிரிக்கா இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் வருகிற 5ஆம் திகதி கேப்டவுனில்ஆரம்பமாகிறது. இந்தத் தொடர் விறுவிறுப்பாக இருக்கும் என கலீஸ் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தியா – தென்னாபிரிக்கா இடையேயான டெஸ்ட் தொடர் தொடர்பாக கலீஸ் கூறியவை வருமாறு: –

விராட் கோஹ்லி உலகின் தலை சிறந்த வீரராக உருவாகி உள்ளார். அணியின் வெற்றி முடிவுகள் அவர் அற்புதமான வீரர் என்பதைக் காட்டுகின்றன. பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியில் விளையாடிய போது அவரது திறமையை அருகில் இருந்து பார்த்து இருக்கிறேன். அவர் சிறந்த வீரராக உருவானமைக்கு அவரது ஆடும் திறன்தான் காரணம். விராட் கோஹ்லி வெற்றி வேட்கையுடன் தொடர்ந்து இருப்பாரானால் அவர் எதையும் சாதிப்பார்.

இந்திய அணியில் வேகப்பந்து வீச்சில் திறமை வாய்ந்த வீரர்கள் உள்ளனர். இங்குள்ள சூழ்நிலை இந்தியாவை விட வேகப்பந்துக்குச் சற்று உதவும். இதனால் இந்தியாவின் வேகப்பந்து வீச்சுத் தாக்குதலைக் காண ஆவலுடன் இருக்கிறேன். கண்டிப்பாக இந்தத் தொடர் விறுவிறுப்பாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

# மன்செஸ்டர் சிற்றியின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்தது கிரிஸ்டல் பலஸ்



பிரீமியர் லீக் உதைபந்துத் தொடரில் மான்செஸ்டர் சிட்டியின் தொடர் வெற்றிக்கு கிரிஸ்டல் பேலஸ் அணி முற்றுப் புள்ளி வைத்தது.

பிரிமீயர் லீக் தொடரில் தற்போதைய 2017 – 18 பருவகாலத்தில் மன்செஸ்டர் சிற்றி அணி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. 21 போட்டிகள் முடிந்துள்ள நிலையில் ஒரு தோல்வியைக்கூடச் சந்தித்ததில்லை.

20 போட்டிகளில் முடிவில் 18 தொடர் வெற்றிகளுடன் வீறுநடை போட்ட மன்





செஸ்டர் நேற்று முன்தினம் இந்த வருடத்தின் கடைசிப் போட்டியில் கிரிஸ்டல் பலஸ் அணியை எதிர்கொண்டது. இந்தப் போட்டியில் வெற்றி பெற்று 19 தொடர் வெற்றிகளைப் பெற்ற அணி என்ற வரலாற்றுச் சாதனையை பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் கிரிஸ்டல் பலஸ் அணி மன்செஸ்டர் சவாலுக்கு கடும் நெருக்கடி கொடுத்தது. இதனால் 90 நிமிடங்கள் வரை மன்செஸ்டர் அணியால் கோல் அடிக்க முடியவில்லை. காயம் மற்றும் விளையாட்டுத் தடை ஆகியவற்றைக் கணக்கிட்டு கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. அப்போது 92ஆவது நிமிடத்தில் கிரிஸ்டல் பலஸ் அணிக்குப் பனால்டி வாய்ப்புக் கிடைத்தது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மன்செஸ்டருக்கு கிரிஸ்டல் பலஸ் அதிர்ச்சி அளிக்கும் என்று எதிரபார்க்கப்பட்டது. ஆனால், கிரிஸ்டல் பலஸ் அணியின் மிலிவோஜோவிக் அந்த வாய்ப்பைத் தவறவிட்டார்.

இதனால் மான்செஸ்டர் சிட்டி அணியின் தொடர் வெற்றி முடிவுக்கு வந்துள்ளது.

# 8ஆவது இடத்திற்கு முன்னேறினார் குக்



இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர் அலஸ்டைர் குக் இரட்டை சதம் அடித்தமையின் மூலம் ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் 8ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆஸ்திரேலியா – இங்கிலாந்து இடையிலான ஆஷஸ் கிரிக்கெட் மெல்போர்னில் நடைபெற்றது. 4ஆவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டனும், தொடக்க விரருமான அலஸ்டைர் குக், 244 ஓட்டங்கள் குவித்தார். இதன்மூலம் 17ஆவது இடத்தில் இருந்த அவர் 9 இடங்கள் முன்னேறி 8 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

ஆஸ்திரேலியா கப்டன் ஸ்டீவ் ஸ்மித் முதல் இடத்திலும், விராட் கோஹ்லி, புஜாரா, கேன் வில்லியம்ஸ் ஆகியோர் முறையே 2ஆவது இடம் முதல் 4ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். ஜோ ரூட் ஓர் இடங்கள் முன்னேறி கேன் வில்லியம்சன் உடன் 4ஆவது இடத்தைப் பகிர்ந்துள்ளார்.

டேவிட் வோர்னர் 6ஆவது இடத்திலும், ஹசிம் அம்லா 7ஆவது இடத்திலும் உள்ள நிலையில், பாகிஸ்தான் வீரர் அசார் அலி 9 ஆவது இடத்திலும், இலங்கை வீரர் தினேஷ் சந்திமல் 10ஆவது இடத்திலும் உள்ளனர்.

### *20 ஓவர் உலகக் கிண்ணம்:*

# ஆஸ்திரேலிய அணிக்கு பொண்டிங் பயிற்சியாளர்?



2020ஆம் ஆண்டு ஐ.சி.சி. 20 ஓவர் உலகக் கிண்ணம் ஆஸ்திரேலிய அணிக்கு ரிக்கி பொண்டிங் பயிற்சியாளராக நியமிக்கப்படவுள்ளார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள்கப்டன்ரிக்கிபொண்டிங். இரண்டு உலகக் கிண்ணங்களை (2003, 2007) பெற்றுக் கொடுத்து பெருமை சேர்த்தவர். ஆஸ்திரேலிய அணியின் வெற்றி மற்றும் வரலாற்றுமிக்க கப்டன் இவர் ஆவார்.

இந்த நிலையில் 2020ஆம் ஆண்டு ஐ.சி.சி. 20 ஓவர் உலகக் கிண்ண ஆஸ்திரேலிய அணிக்கு ரிக்கி பொண்டிங் பயிற்சியாளராக நியமிக்கப்படுவார் என்று தெரிகிறது. இது தொடர்பாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அவருடன் பேச்சு நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

பொண்டிங் ஏற்கனவே இலங்கை அணிக்குஎதிரான மூன்று போட்டி கொண்ட 20 ஓவர் தொடரில் உதவி பயிற்சியாளராகப் பணியாற்றி இருந்தார்.

ஆஸ்திரேலிய அணியின் பயிற்சியாளராக இருக்கும் லீமேனின் ஒப்பந்தம் 2019ஆம் ஆண்டு முடிகிறது. 20 ஓவர் அணிக்கு பொண்டிங் பயிற்சியாளராக நியமிப்பதில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை ஆர்வத்துடன் இருக்கின்றது.

## இ.போ.ச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுவருட தினத்தில் ஆலயங்கள் மற்றும் இதர தேவைகளின் நிமித்தம் பல இடங்களுக்கும் செல்வதற்காகப் பொதுமக்கள் பஸ்ஸுக்காகக் காத்து நின்று இ.போ.ச. பஸ் சேவை இல்லாமையால் பெரும் சிரமப்பட்டனர்.

இவ்வாறானதொரு நெருக்கடியான நிலையில் தனியார் பஸ் சங்கத்தினர் சிறந்த சேவைகளை வழங்கியிருந்தனர் எனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இன்றையதினம் பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் இ.போ.ச. பணிப் பகிஷ்கரிப்பு பாடசாலை மாணவர்கள் மற்றும் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலருக்கும் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்துமென்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-7)

## மூடப்பட்டது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இ.தயாபரனால் பஸ் நிலையத்தின் இரண்டுபக்கநுழைவாயில்களும் பஸ்கள் உட்செல்வதற்குத்தடை விதிக்கப்பட்டுப்பாதை மூடப்பட்டுள்ளது.

வவுனியாவில் 19 கோடியே ஐம்பது லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டபுதியபஸ்நிலையம்கடந்த 11மாதங்களாகமூடப்பட்டிருந்தது. அந்த பஸ் நிலையத்திற்கு இ.போ.சபை பஸ்கள் செல்வதற்கு சபைத் தரப்பு மறுத்து வந்த நிலையிலேயே முதலமைச்சர் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

தனியார் பஸ்கள் கடந்த வாரம் முதல் புதிய பஸ் நிலையத்தில் இருந்து தமது சேவையை முன்னெடுத்து வருகின்றன. ஆனால் இ.போ.ச. பஸ்கள் புதிய பஸ் நிலையத்தை பயன்படுத்தாது புறக்கணித்து வந்தன. இந்த நிலையிலேயே பழைய பஸ் நிலையம் மூடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா நகரசபைச் செயலாளரிடம் வினவியபோது –

வடக்கு மாகாண முதலமைச்சரின் பணிப்புரைக்கமைய வவுனியா நகரசபைக்குரிய பஸ் நிலையம் நள்ளிரவு12மணியில் இருந்து மூடப்பட்டுள்ளது. நேற்றில் இருந்து பொதுமக்கள் தமது பிரயாணங்களை புதிய பஸ் நிலையத்தில் இருந்து மேற்கொள்ளவேண்டும் என்று தெரிவித்தார். (ஐ-100)

## சிவராமின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை தன்னைச் சந்தித்த செய்தியாளர்களிடமே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஊடகவியலாளர் சிவராம் படுகொலையுடன் எமது கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டிலிருந்து அவர் நீதிமன்றால் முற்றுமுழுதாக விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு இருக்கையில் சிவராம்கொலையுடன்தொடர்புடையவர் எவ்வாறு தேர்தலில் நிற்கிறார்எனத்தெரிவிக்கமுடியும்? அத்துடன், புளொட் உறுப்பினர் யார் என்றும் சொல்லப்படவில்லை.

தற்போது எமது கட்சி மீது அவதூறைப் பரப்பும் நோக்குடன் சில அச்சு ஊடகங்களால் உண்மைக்கு மாறாகச் செய்தி வெளியிடப்படுகிறது. – என்றார். (ஐ)

# தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் ரணில்

கொழும்பு, ஜன.02

தமிழ் முற்போக்கு கூட்டணியின்முதலாவதுதேர்தல்பிரசார கூட்டம், ஹட்டனில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஹற்றன் டீ.கே.டபிள்யூ கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இந்தக்கூட்டத்தில், ஐ.தே.க.வின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்ரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்தக் கூட்டத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியை பிரதிநித்துவப்படுத்தும் அமைச்சர் பழனி திகாம்பரம், ராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ், ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கே.கே.பியதாஸ மற்றும் மாகாண, பிரதேச சபை உறுப்பினர்கள், வேட்பாளர்கள், ஆதாரவாளர்கள் எனப் பெரும் எண்ணிகையானோர் கலந்துகொண்டிருந்தனர்.

உள்ளூராட்சிமன்றத்தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம்திகதிநடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பொலித்தீன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக, மேற்படி தடை செய்யப்பட்ட பொலித்தீன் வகைகளின் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விற்பனையாளர்கள் தொடர்பில் அதிரடிப் பாய்ச்சல் நடவடிக்கையை எடுப்பதற்கு சபை தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## தபால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் செயலாளர் நாயகம் ஆர்.எம்.ஏ.எல்.ரத்னாயக்கதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஆவணப் பரிசோதனைகள்தற்போது மாவட்டத்தேர்தல் அலு வலகங்களில் இடம்பெறுகின்றன. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கானதபால்மூலவாக்களிப்பு வரும் 25ஆம், 26ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. வாக்குகள் எண்ணும் பணி வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெறுவதால் இது தொடர்பில் அதிகாரிகளுக்கு பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

தேர்தல் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்காகத் தேர்தல் செயலக அலுவகத்திலும் மாவட்டத் தேர்தல் அலுவலகங்களிலும் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது. – என்றார். (ஐ)

## ஒன்றரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளையாடிக்கொண்டிருந்த சமயத்தில் இந்த அசம்பாவிதம் நேர்ந்துள்ளது.

இரணைமடுகுளத்திலிருந்து கிளிநொச்சி நீரேந்தும் குளத்திற்கு செல்லும் இந்தக் கால்வாயானது மிகவும் ஆழமானதென தெரிவிக்கப்படுகிறது. குழந்தைதவறிவிழுந்தபின்னர் அதனை மீட்க முயற்சித்த போதும், சுமார் 150 மீற்றருக்கு அப்பால் குழந்தை நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. குற்றுயிருடன் குழந்தை மீட்கப்பட்ட போதும், வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட பின்னர் அது உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.மேலதிகவிசாரணைகளைகிளிநொச்சிபொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை கடந்த 21ஆம் திகதிகிளிநொச்சி கண்ணகிபுரம் பகுதியிலும் நீரில் மூழ்கி ஒன்றரை வயது குழந்தையொன்று உயிரிழந்தமைகுறிப்பிடத்தக்கது.

## மோ.சைக்கிள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

23 வயதான ஜோசப் அல்பிரட் ரவிராஜ் மற்றும் 33 வயதான ஆனந்தராஜாக்ரைன்சன் ஆகிய இருவரே உயிரிழந்தனர்.

நேற்று மாலை இந்த இருவரும் மணியம் தோட்டம் பகுதியில் வேகமாக மோட்டார்சைக்கிளில்பயணித்துக்கொண்டிருந்த போது துண்டி சந்திக்கு அண்மையில் வீதியில் காணப்பட்ட 'பம்மிங்' கில் வேகமாக செலுத்தி வந்த மோட்டார்சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து இருவரையும் தூக்கி வீசியுள்ளது.

இதனால் அருகில் இருந்த கம்பம் ஒன்றுடன் மோதுண்டு படுகாயமடைந்த அவர்கள் இருவரும் யாழ்.போதனாவைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இருப்பினும், சிகிச்சை பலனின்றி ஒருவர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு 5 நிமிடங்களிலும் மற்றைய நபர் சுமார் 30 நிமிடங்களின் பின்னரும் உயிரிழந்ததாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை – இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்து, அந்தச் சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தால் இ.போ.ச. பஸ் சேவைகள் வடக்கு முழுவதும் நேற்று காலையிலிருந்து முடங்கின.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தனித்துவத்தை காப்பாற்றும் வகையில், நீதியான தீர்வை வழங்கும்வரை இந்தப் போராட்டம் காலவரையறையின்றித் தொடரும் என வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஒன்றிணைந்த தொழிற் சங்கத்தின் செயலாளர் அ.அருட்பிரகாசம்தெரிவித்தார்.

முதலமைச்சரின் உத்தரவை அடுத்தே வவுனியா பழைய பஸ் நிலையம் நேற்றுமுன்தினம்முதல்முற்றாகமூடப்பட்டது.

பழைய பஸ் நிலையம் மூடப்பட்டதை அடுத்து புதிய பஸ் நிலையத்தில் இருந்து சேவைகளை ஆரம்பிக்குமாறு இ.போ. சவினருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு மறுப்புத் தெரிவித்தே வடக்கு இ.போ.சவினர் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். (ஐ)

## தமிழரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களின் போராட்ட வரலாற்றில் மிகவும் உச்சமான பலமாக இருந்தது தமிழீழ விடுதலைப் புலிகளின் காலம் என்பதை யாவரும் அறிந்திருப்பீர்கள். அந்தப் பலத்தின் ஒரு பகுதியைத் தற்போது நாங்கள் இழந்து நிற்கின்றோம் – என்றும் அவர் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்றுக் காலை நற்பிட்டிமுனை சுமங்கலி திருமண மண்டபத்தில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இன்றைய காலகட்டத்தில் மூன்று கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு பலமான ஜனநாயகக் கட்சியாக மக்கள் முன் தேர்தலில் குதித்திருக்கின்றன. இதனை அனைத்துத் தமிழ் மக்களும் நன்குணர்ந்து செயற்படவேண்டும்.

ஜனநாயகப் போராளிகள் கட்சியை ஜனநாயக நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டமைக்கு இணங்க அந்தக் கட்சி தற்போது எமது கட்சியுடன் இணைந்து உள்ளூராட்சித் தேர்தல் களத்தில் இறங்கியிருக்கின்றது.

இன்றைய காலத்திற்கு ஏற்றாற்போல் எதிர்காலச் சந்ததியினராகிய இளைஞர்கள் அரசியல் களத்தில் இறக்கவேண்டிய தேவையும் உள்ளது. அதனைக் கருத்தில் கொண்டு எமது கூட்டமைப்பு இம்முறை முன்னாள் போராளிகளையும் தேர்தல் களத்தில் களமிறக்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

எது, எவ்வாறு இருந்தபோதும் கூட்டமைப்புக்கு எதிராகப் பலவிதமான விமர்சனங்களை மாற்றுக் கட்சியினர் சுமத்துகின்றமையை ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. கூட்டமைப்பின் அரசியல் நிலைப்பாடு தொடர்பாக எமது மக்களுக்கு விளக்கம் கொடுக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவரிடமும் இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு பலமாக இருந்த காலத்தில் ரணில் தலைமையிலான இலங்கை அரசுடன் 2002 இல் போர் நிறுத்தம் ஒன்றைச் செய்திருந்தார்கள். அந்தப் போர் நிறுத்தம் சர்வதேச நாடுகளின் கண்காணிப்பின்கீழ்இருக்கவேண்டும் என்பதன் அடிப்படையில் ஒஸ்லோவில் நோர்வே நாட்டுப் பிரதிநிதிகளின் பிரசன்னத்தில் அந்த ஏற்பாடு நடைபெற்றது.

அந்தக் காலகட்டத்தில் எமது கட்சியின் தலைமை பகிரங்கமாகவே அறிக்கை விட்டிருந்தது. அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தான் பேச வேண்டும் என்று பகிரங்கமாகவே கூறியிருந்தோம்.

கடந்த 30 வருடங்களாக நடைபெற்று வந்த ஆயுதப் போராட்டம் 2009 மே 18 அன்று ஓர் எல்லையை அடைந்தது. அதன் பிற்பாடு தமிழ் மக்களுடைய உச்சப் பலம் வலுவிழந்து காணப்பட்டது. அவ்வாறு இருந்த போதும் எமது மக்கள் தங்களது பலத்தைத் தேர்தல் காலங்களில் வாக்குப்பலம் மூலம் நிரூபித்து வெற்றியும் கண்டிருக்கின்றார்கள்.

ஆயுதப் போராட்டம் நடைபெற்ற காலத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான எமது மக்கள் கொல்லப்பட்டமையுடன் அவர்களது உடைமைகளும் அழிந்து நாசமாகின. அவை அனைத்தையும் மக்கள் இழந்தபோதும் அவர்களது உரிமையை தங்களிடம்உள்ளவாக்குப்பலம்மூலம் நிரூபித்திருந்தார்கள்.

இதேபோன்றுதான் ஆயுதப் போராட்டம் முடிவுற்றபின்பு நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் எமது மக்கள் கூட்டமைப்புத்தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை நிரூபிக்கத் தவறவில்லை. அவ்வாறு நிரூபித்த காரணமாகத்தான் கூட்டமைப்புடன் பேசவேண்டும் என்று சம்பந்தன் தலைமையிலான குழுவை அமெரிக்கா அழைத்துத்தமிழ் மக்கள் தொடர்பான பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

தற்போது எம்மிடையே உள்ள மாற்றுக் கட்சிகள் புதிய அரசமைப்பு தொடர்பாக மாறுபட்ட கருத்துக்களை முன்வைத்து வருகின்றன. அந்த வகையிலே தான் சில பத்திரிகைகளும் ஒற்றையாட்சி தொடர்பான கருத்துக்களை முன்வைத்து வருகின்றன. எமது கட்சி ஒருமித்த நாட்டுக்குள் அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதனையே வலியுறுத்தி வருகின்றது. இதனைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்– என்றார். (ஐ)

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்பட்ட வழக்குகள் உள்ளன என்றும் சில வழக்குகளில் அந்த வேட்பாளருக்கும் சம்பந்தம் உள்ளன என்றும் கூறப்படுகின்றது.

தமது மக்களுக்காக அடிக்கடி குரல் எழுப்பி 'தவம்' இருக்கும் ராசா ஒருவரும் இதே வட்டாரத்தைத் தான் சேர்ந்தவராம். அதனால்அந்த வட்டாரமக்கள் அவரிடம் படையெடுத்துத் தங்கள் விசனத்தைத் தெரிவித்து, வாக்களிப்பின் போது முன்னெடுக்க வேண்டிய மாற்று மார்க்கம் குறித்து ஆலோசித்து வருகின்றனர் என்றும் தகவல்.

யாழ். மாநகரசபை தேர்தல் விடயத்தில் ஏற்கனவே கிறிஸ்தவ, இந்து சர்ச்சை தோன்றி இருப்பது தெரிந்ததே.

யாழ். மாநகர சபைக்கு 27 வட்டாரங்கள். அவற்றில் 17 யாழ். பிரதேச செயலக பிரிவிற்கும் எஞ்சிய பத்தும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கும் உரியவை.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் நல்லூர் கோயில் அமைந்திருக்கும் 'ராஜதானி' வட்டாரத்துக்கு கிறிஸ்தவப் பெண் ஒருவரை நிறுத்தியிருக்கின்றது தமிழரசுக் கட்சி.

யாழ் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 17 வட்டாரங்களிலும் ஓரிரண்டைத் தவிர, பெரும்பாலும் அனைத்து வட்டாரங்களுக்கும் கிறிஸ்தவ வேட்பாளர்கள் தான் என்று சீறுகின்றன சில இந்து, சைவ அமைப்புக்கள்.

மாநகர மேயர் வேட்பாளரான ஆர்னோல்டின் கைவரிசை இது என்றும் அவை கூறுகின்றன.

மாவை(கந்தன்)நெற்றிக்கண்ணைத் திறக்காமல் தலையாட்டிச் சாமியாக இருக்கின்றமையால் வந்த சோதனை இது என்றும் அந்த அமைப்புக்கள் நொந்து கொள்ளத் தவறவில்லை.

- மின்னல்.

காலைக்கதிர் Kalaikkathir



# கைவிடப்பட்ட நிலையிலுள்ள கால்நடை உற்பத்திப் பண்ணை

முல்லைத்தீவு, ஜன. 02

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு, சிறாட்டிகுளம் பகுதியில் கால்நடை உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கால்நடை உற்பத்திப்பண்ணைகைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது என அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தவை வருமாறு:-




கடந்த 2010 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் கால்நடை உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையிலும் திட்டம் தயாரிக்கப்பட்டது.

அத்துடன், சிறாட்டி குளம் பறங்கியாற்றுக்கு அருகில் பல மில்லியன் ரூபா செலவில் மாதிரிக் கால்நடைப்பண்ணை ஒன்றும் நிறுவப்பட்டதுடன், நல்லிணக்க கால்நடைகளை உற்பத்தி செய்யும் செயற்றிட்டம், கால்நடை வைத்திய சிகிச்சை நிலையம் என்பன அமைக்கப்பட்டன.

கடந்த 2014 ஆம் ஆண்டு இதன் கட்டுமானப் பணிகள் அனைத்தையும்நிறைவுசெய்து மக்கள் பாவனைக்காக கையளிக்கவேண்டிய நிலையில் அதனை இன்று வரை கையளிக்காது விட்டமையால் அது முழுமையாக செயலிழந்து காணப்படுகின்றது. இதன் கட்டுமானங்கள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, துணுக்காய் கோட்டைகட்டியகுளம் பகுதியிலும் மல்லாவி அனிச்சியன் குளம் பகுதியிலும் இவ்வாறு பல கோடி ரூபா செலவில் அபிவிருத்தி என்ற போர்வையில் பெருந்தொகை நிதி வீணடிக்கப்பட்டிருக்கின்றது. இது தொடர்பில்சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அரசியல் பிரதிநிதிகளுக்கும் தெரியப்படுத்தியும் இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.





உலக தமிழர் பண்பாட்டு இயக்கம் இம்மாதம் பிற்பகுதியில் 2018 ஆம் ஆண்டுக்கான மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்து வருகிறது.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் யாழ். சர்வோதய நிலையத்தில் தலைவர் ஸ்ரீயுகேந்திரா தலைமையில் நடைபெற்ற போது உள்ளூர், வெளியூர் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். நிகழ்வில் வரவேற்பு, மலர் வெளியீடு, கௌரவித்தல் போன்றவற்றுக்கான குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. (இ-19)

# நல்லிணக்கத்துக்கு பங்காற்றியவர்களுக்கு ஹெம்மாதகமையில் கௌரவம்!



கொழும்பு, ஜன. 02

தாய் நாட்டிற்கும், பிரதேசத்தின் இன நல்லிணக்கத்திற்கும் மகத்தான பங்களிப்புகளை மேற்கொண்ட 18 சமூக ஆர்வலர்களை ஹெம்மாதகமை பௌத்த- இஸ்லாமிய சமூக நலன்புரி அமைப்பு கௌரவித்தது.

ஹெம்மாதகமை பௌத்த-இஸ்லாமிய சமூக நலன்புரி அமைப்பின் இணைத் தலைவர் ஓய்வுபெற்ற அதிபர் அஸ்ஹர் தலைமையில் சல்மா மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வின் பிரதம அதிதிகளாக மாவனல்லை பிரதேச செயலாளர் பிரியங்கனி பெதங்கொட, அரனாயக்க பிரதேச செயலாளர் இஸட்.ஏ.எம்.பைசல் மற்றும் பதில் நீதிவான் கமணி குமாரி மேகசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர்.

இன நல்லிணக்கத்திற்கு பங்களிப்புகளை மேற்கொண்டு வரும் ஹபுவிட்ட வண நாரத தேரர், இலுக்கொட வண ஞானாநந்த தேரர், வண சுசில தேரர், அஷ் ஷெய்க் எம். எஸ்.எம். தாஸிம், டபிள்யூ. பி.விக்ரம பால, டாக்டர் ஆரியசேன கமகே, என். எம்.அமீன், ஆர். எல்.சனத் ரஞ்சித், எம்.எச். எம். யூஸுப், டபிள்யூ. ஏ.சுமனசிறி வீரசேகர, எம். எச்.எம்.ஹசன், டீ. எம். ஜீ. தேவகிரி, பீ.சோமவீர ஹேமசந்திர, கே.டபிள்யூ. செனரத் வீரசிங்க, கே.ஆர். குமார செனவிரத்ன, ஆர். ஜீ.ஏ.ரீ. ரணதுங்க, ஏ.டபிள்யூ. எம்.முனாஸ், எம்.ஆர்.செனவிரத்ன கொட போதிய ஆகியோர் இங்கு கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் பிரதம அதிதிகளில் ஒருவரான மாவனல்லை பிரதேச செயலாளர் பிரியங்கனி பெதங்கொட உரையாற்றும்போது-

மாவனல்லை வலயத்தில் முஸ்லிம்களும் பௌத்தர்களும் சமாதானமாக வாழ்ந்து வருகின்றனர் எனக் குறிப்பிட்டேன். இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஒருவர் உலகில் உள்ள மொத்த தூசணை வார்த்தைகளைக் கொண்டு என்னைத் தூற்றி கடிதம் அனுப்பியிருந்தார்.

கடிதத்தை எழுதியவரின் கைகள் உடைந்துபோக வேண்டும். நாம் ஒன்று பட்டு வாழ்வதை பொறுத்துக் கொள்ள முடியாத பிரிவினரும் சமூகத்தில் இருக்கின்றனர்.

சிலர் இனவாதத்தை தூண்ட முயற்சிக்கின்றனர். அவ்வாறானோரே கீழ்த் தரமாகச் செயற்படுகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# காரைநகர் மணிவாசகர் சபையின் 63 ஆவது திருவாசக விழா நிகழ்வு







காரைநகர் மணிவாசகர் விழா முன்னெடுக்கும் திருவாசக விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் 29.12.2017 வெள்ளிக்கிழமை ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான மண்டபத்தில் திருப்பெருந்துறை அரங்கில், யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைத் தலைவர் ஓய்வுநிலை நீதிபதி இ.வசந்தசேனன் தலைமையில் நடைபெற்றது.

.நிகழ்வில் மாவை ஆதீன முதல்வர் மகாராஜஸ்ரீ கு.ச.இரத்தினசபாபதிக் குருக்கள் ஆசியுரை வழங்கினார். ஈழத்துச் சிதம்பர ஆதீன கர்த்தர் மு.சுந்தரலிங்கம் திருவாசகம் இசைத்தார். மணிவாசகர் சபையின் உபதலைவர் ஓய்வுநிலை அதிபர் க.தில்லையம்பலம் வரவேற்புரை ஆற்றினார்.

சிறப்புச் சொற்பொழிவுகளாக 'உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்ற பொருளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசனும் 'வேண்டத்தக்கது அறிவோய் நீ' என்ற பொருளில் கலாபூஷணம் காரை பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளையும் சொற்பொழிவுகளை ஆற்றினர்.

திருவாசக விழாவையொட்டி காரைநகர் பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட திருவாசகப் போட்டிகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. நிகழ்வுகளை மணிவாசகர் சபையின் தலைவர் ஓய்வுநிலை அதிபர் வே.முருகமூர்த்தி நெறிப்படுத்தினார்.

திருவாசக விழா கடந்த 28 ஆம் திகதி தொடக்கம் நேற்று திங்கட்கிழமை வரை இடம்பெற்றது.

காரைநகர் மணிவாசகர் சபை 1940 ஆம் ஆண்டில் யோகர் சுவாமிகளின் ஆசிகளுடன் அமரர் கலாநிதி வைத்தீசுவரக் குருக்களால் நிறுவப்பட்ட சபை என்பது குறிப்பிடத்தக்கது. (இ

# DAN TV ஏற்பாட்டில் 2018 ஆம் ஆண்டை வரவேற்கும் கொண்டாட்ட நிகழ்வு



டான் தொலைக்காட்சி ஏற்பாட்டில் 2018 ஆம் ஆண்டை வரவேற்கும் முகமாக நேற்றுமுன்தினம் இரவு யாழ்.முற்றவெளியில் வாண வேடிக்கைகள், கண்கவர் கலாசார நடனங்கள் மற்றும் யாழ்ப்பாணத்தின் பிரபல இசைக்குழுக்கள் இணைந்து நடத்திய பிரமாண்டமான இசை நிகழ்சியின் படங்கள்.

# காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேர்த்திருவிழா



காரைநகர் – திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரத்தில் நேற்று நடைபெற்ற மார்கழித் திருவாதிரை உற்சவத் தேர்த் திருவிழாக் காட்சிகள்.

(படப்பிடிப்பு:- சிந்துஜா போட்டோ)

## மாணவர்கள் புதிய அனுமதி

**சிவபூமி பாடசாலை**
**(சிறுவர் மனவிருத்திப் பாடசாலை)**
**கனகபுரம் - கிளிநொச்சி**

2018 ஆம் ஆண்டுக்குரிய புதிய மாணவர் அனுமதி நடைபெறுகின்றது.

எனவே நேரடியாக எமது பாடசாலை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

முகவரி : சிவபூமி பாடசாலை, 1ஆம் ஒழுங்கை, கனகபுரம், கிளிநொச்சி
தொ.பே. இல: 021 222 7938

## மாணவர்கள் புதிய அனுமதி

**சிவபூமி பாடசாலை**
**(சிறுவர் மனவிருத்திப் பாடசாலை)**
**கோண்டாவில் - யாழ்ப்பாணம்**

2018 ஆம் ஆண்டுக்குரிய புதிய மாணவர் அனுமதி நடைபெறுகின்றது.

எனவே நேரடியாக எமது பாடசாலை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

முகவரி: சிவபூமி பாடசாலை, கோண்டாவில், யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 7938

## வவுனியா செயலகத்தில் தேர்தல் முறைப்பாடுகளை பதிவதற்கு அலுவலகம்

எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக வவுனியா மாவட்ட முறைப்பாடுகளை பதிவு செய்வதற்காக வவுனியா மாவட்ட செயகலகத்தில் முறைப்பாட்டு அலுவலகம் (உதவி மாவட்ட செயலாளர் அலுவலக அறை) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை இந்த அலுவலகத் தில் நேரடியாகவோ அல்லது பின்வரும் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் முகவர் மூலமாகவே தெரியப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி இல. 024 222 2138, தொலைநகல் 024 222 2138, மின்னஞ்சல் முகவரி vavunia.complaint@gmail.com.

மாவட்டம் தோறும் இத்தகைய அலுவலகங்கள் திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-100)

## மரண அறிவித்தல்

### முருகன் இரத்தினம்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் அனலைதீவு 5 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் இரத்தினம் கடந்த 29.12.2017 வெள்ளிக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் தனது 83 ஆவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், அசோகா, அசோக்குமார், பார்த்தீபன் வாசுகி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அனுசியா மற்றும் நிவேதாவின் அப்பப்பாவும் மதுசன், மதுசியா, மதுசாளின், மனோசுஜீன் ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 02.01.2018 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அனலைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**5 ஆம் வட்டாரம், அனலைதீவு.**

**தகவல் குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2018 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.